
அடக்கப்படும் அப்பாவிகள்
சூரியகாந்தி
பக்கம் 7


கூட்டமைப்பு பதில் சொல்ல வேண்டும்
பக்கம் 02


வெற்றியைப் பறித்து பற்றிக்ஸ்
பக்கம் 17


வென்றது ஆபிரிக்கா
பக்கம் 16



விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள்: 56

# உதயன்

சுடர் 27
கதிர் 92

வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (26/02/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# ஜெனிவா பிரேரணைக்கு 25 நாடுகள் முழு ஆதரவு

## விவாதம் இப்போது வேண்டாம் என்கிறது அரசு

*கொழும்பு, பெப்ரவரி 26*

*ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19 ஆவது அமர்வு நாளை ஆரம்பமாக உள்ள நிலையில், இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட உள்ளதாகக் கூறப்படும் தீர்மானத்தை 25 முதல் 30 நாடுகள் ஆதரிக்கும் சாத்தியங்கள் இருக்கின்றன என்று ஜெனிவாத் தகவல்கள் கூறுகின்றன.*



*47 நாடுகளைக் கொண்ட மனித உரிமைகள் சபையில் 24 நாடுகளின் ஆதரவு இருந்தால் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற முடியும். அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இலங்கைக்கு எதிரான பிரேரணைக்குத் தமது உறுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளன. அதே போன்று ஆபிரிக்க நாடுகளும் தமது ஆதரவைத் தெரிவிக்க உள்ளன.*

*இலங்கைக்கு எதிரான பிரேரணையை*

» 19

## நியூஸிலாந்தில் இலங்கையர் அடித்துக்கொலை

கொழும்பு, பெப்.26

நியூஸிலாந்து, ஒக்ஸ்போட் டொமைன் வீதியிலுள்ள வீடொன்றில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்த சம்பம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 28 வயதான சமீர சந்திரசேன என்ற இந்த இளைஞர் வீட்டில் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் அவரது உடலில் பலத்த அடிகாயங்கள் காணப்பட்டதனையடுத்தே சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் நியூஸிலாந்திலுள்ள நீதிமன்றம் ஒன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த)

## கடத்தப்பட்டவர் சடலமாக மீட்பு

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் வெலிக்கந்தைப் பிரதேசத்தில் கடத்திச் செல்லப்பட்ட ஏறாவூரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் நேற்று சனிக்கிழமை காலை உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஏறாவூர் ஓடாவியார் வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.ஐ.எம். இப்ராஹிம் (வயது42) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக வெலிக்கந்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கே சொந்தம் கச்சதீவு

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்பதனை நிரூபிக்க எழுத்து மூல ஆவணங்கள் உள்ளன என்று வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரவி விஜேகுணவர்த்தன தெரிவித்துள்ளார். கச்சதீவை மீளவும் இந்தியா பெற்றுக்கொள்ள வேண்டும் என தமிழக அரசியல்வாதிகள் விடுத்து வரும் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழக அரசியல்வாதிகள் இவ்வாறான கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதனை நிரூபிப்பதற்கு தேவையான எழுத்து மூலமான ஆதாரங்கள் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். கச்சதீவு அந்தோனியார் ஆலயம் யாழ். ஆயரினால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றமை மூலம் இது மேலும் உறுதியாகின்றது. கச்சதீவு இலங்கை கடற்பரப்பில் அமைந்துள்ளது என அவர் மேலும் கூறினார். (த)

## கூட்டங்களில் பங்கேற்பேன் சவேந்திரா பிடிவாதம்

ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படைப்பிரிவின் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாகப் பங்கேற்கப் போவதாக இலங்கை பிரதி வதிவிடப் பிரதிநிதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஆசிய பசுபிக் பிராந்திய வலய நாடுகளுடன் பேச்சு நடத்தினேன். கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டும் என்பதே ஆசிய பசுபிக் நாடுகளின் விருப்பமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார். இதேவேளை, ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நான் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டமைக்கு குழுவின் தலைவர் லூயிஸ் பிறெசெற்றே எதிர்ப்பை வெளியிட்டார். எனினும், கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெற்ற ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். அத்துடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்திலும் நான் கலந்து கொள்வேன் என சவேந்திர சில்வா திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டமைப்பு ஜெனிவா போகாது

கொழும்பு, பெப் 26

ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் திட்டவட்டமாக நேற்று அறிவித்தனர்.

இனங்களுக்கு இடையிலான "பதற்றத்தை அதிகரிக்க வேண்டாம்" என்ற நோக்கத்துடன் கூட்டமைப்பு ஜெனிவாக் கூட்டத் தொடரில் பங்கேற்கப் போவதில்லை என்று அதன் தலைவர் இரா. சம்பந்தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவாவில் பெப்ரவரி 27 தொடக்கம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான விடயம் முக்கிய இடம் வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தினால் நிய

» 19

## ஜெனிவாத் தொடரை எதிர்கொள்ள செல்லவேண்டியவர் பொன்சேகாவே

### முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகிறார்

கொழும்பு, பெப் 26

ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐ.நாவின் மனித உரிமைகள் பேரவையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கும் அதனை எதிர்கொள்வதற்கும் செல்லவேண்டிய முக்கிய நபர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி நகர மண்டபத்தில் நடைபெற்ற தொழில்சார் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஜெனிவா நகரில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

இவற்றை எதிர்கொள்ள இலங்கையிலிருந்து 52பேர் அடங்கிய குழு ஜெனிவா சென்றுள்ளது. எனினும்மனித

» 19

## இலங்கை பிரதிநிதிகள் ஜெனிவா பயணம்

கொழும்பு,பெப் 26

ஜெனிவாவில் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கை தூதுக்குழுவின் மற்றுமொரு குழுவினர் நேற்று சனிக்கிழமை அதிகாலை ஜெனிவா பயணமகியுள்ளனர்.

இக்குழுவில் அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, அநுர பிரியதர்ஷன யாப்பா, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரையப்பா நவரத்தினராஜா மற்றும் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்

» 19

## இலங்கையின் மனித உரிமைகள் மீறல்: இந்திய அரசுக்கு அழுத்தம் அதிகரிப்பு

கொழும்பு, பெப்.26

வன்னியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கான சர்வதேசப் பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நாளை ஆரம்பமாக உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று இந்திய கொமியூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட வல்லுநர்கள் குழுவின் அறிக்கையில், இறுதிப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதற்கான நம்பகமான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இந்த விடயத்தை மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் இந்தியா எழுப்ப வேண்டும் என்று தெரிவித்தார் கொமியூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா.

கட்சியின் சார்பில் இந்த விடயத்தை வலி

» 19

## புலிகள் சரணடைய முன்வந்த இடத்துக்கு பிளேக்குடன் செல்ல அனுமதி மறுப்பு

### ஐ.நா அதிகாரி நம்பியார் ஒப்புக்கொள்கிறார்

நியூயோர்க்,பெப் 26

போரின் இறுதிக்கட்டத்தில் வன்னியில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வெள்ளைக்கொடியுடன் சரணடைய முன்வந்த இடத்துக்கு அமெரிக்க இராஜதந்திரி றொபேர்ட் ஓ பிளேக்குடன் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தேன். எனினும் இலங்கை அரசு நாம் அங்கு செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை. எம்மால் கட்டாயப்படுத்த முடியவில்லை இவ்வாறு ஐ.நா செயலரின் தலைமை அதிகாரி விஜய் நம்பியார் தெரிவித்திருக்கிறார்.

சவேந்திர சில்வா விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் நியூயோர்க்கில் செய்தியாளர் சந்திப்பில் இன்னர்சிற்றி பிரஸ் செய்தியாளர் விஜய் நம்பியாரிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த நம்

» 19


Ranjanas CERAMIC
யாழ். நகரில் சிறந்த வர்ணத் தெரிவுகளுடன் கூடிய தரமான Granite வகைகளை பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு இடம்..
அனைத்து விதமான வீட்டுத் தரைஓடுகள், குளியலறை உபகரணங்கள் மற்றும் நீர்க் குழாய்கள் அனைத்தையும் ஒரே குடையின் கீழ் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...
# 212, Palaly Road, Jaffna. 021 222 0033 / 021 222 0044
#05, Stanley Road, Jaffna. 021 222 4777/021 222 4888
#05A, Kodikamam Road, Nelliyadi. 021 226 2000 /021 226 3111

இந்தியா மற்றும் மலேசியாவில் தயாரிக்கப்பட்ட தரம்மிக்க EXTANT WATER HEATER வகைகளை சிறந்த விலைகளில் யாழ். நகரில்பெற்றுக்கொள்ள நம் பிக்கையுடன் நாடுங்கள்...



metro engineering (pvt) ltd

CMB/DOHA - 14,800/=
CMB/DUBAI -13,700/=
CMB/LONDON/CMB -71,400/=
CMB/TIRUCHI/CMB -9,800/=
CMB/ TORONTO/CMB -122300/=
CALL 0777727617
AIRMARK Travels & Tours
IATA

# புகலிடம் கோரும் தமிழர்களை நாடு கடத்துவதை நிறுத்துங்கள்

## மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை

திருப்பியனுப்பப்பட்டவர்கள் சிகரெட்டுக்களால் சுடப்படல், தலைகீழாகக் கட்டப்பட்டுத் தாக்கப்பட்டமை, ஆடைகளை களைந்துவிட்டும் தாக்கப்படுதல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல் போன்ற மோசமானதுன் புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு, பெப்.26

இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை பிரிட்டன் உடனடியாக நிறுத்த வேண்டும் என மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து பிரிட்டிஷ் அரசு மதிப்பீடு செய்யவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர் என்று தமக்கு நம்பத்தகுந்த சாட்சியங்களின் மூலம் தெரிய வந்துள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தமக்கு கிடைத்த எட்டு சாட்சியங்களின் விவரங்களையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே திருப்பியனுப்பப்பட்டவர்கள் சிகரெட்டுக்களால் சுடப்படல், தலைகீழாகக் கட்டப்பட்டுத் தாக்கப்பட்டமை, ஆடைகளை களைந்துவிட்டு தாக்கப்படுதல், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுதல் போன்ற மோசமானதுன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது. சிலர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்ததாக ஒப்புதல்அளிக்குமாறு துன்புறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் 100 பேரை எதிர்வரும் 28ஆம் திகதி பிரிட்டனின் தனி விமானம் ஒன்றில் இலங்கைக்கு நாடு கடத்த உள்ள நிலையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் இக்கோரிக்கையை விடுத்துள்ளது. அத்துடன், புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்த சர்வதேச சட்டங்களைப் பிரிட்டன் பின்பற்ற வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் பிரட் அடம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, இலங்கைக்கு திரும்பும் புகலிடக் கோரிக்கையாளர்கள் மீது சித்தரவதைகளையோ, துன்புறுத்தல்களையே மேற்கொள்ள வேண்டாம் என இலங்கை அரசிடம் மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது. இத்தகைய விவகாரங்கள் தொடர்பிலான சர்வதேச பிரகடனங்களில் இலங்கை அரசும் கைச்சாத்திட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது. (த)

# ரூ.70 லட்சம் பெறுமதியான நகைகள் கொள்ளையிட்ட வழக்கு ஒத்திவைப்பு

## இரு சந்தேக நபர்கள் தொடர்ந்து மறியலில்

இரண்டு மாதக் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி கொள்ளையிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப்.26

70 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் உடைமைகளைக் கொள்ளையடித்தனர் எனக்கூறப்படும் சந்தேகநபர்கள் இருவர் மற்றும் அந்த நகைகளைக் கொள்வனவு செய்த சந்தேக நபரான நகைத் தொழிலாளி ஆகியோர் தொடர்பான வழக்கு அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பயங்கரமான ஆயுதங்களுடன் வீடுகளினுள் புகுந்து கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு கொள்ளைச் சம்பவத்தில் இரண்டு மாதக் குழந்தையின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி நகைகள் பறிக்கப்பட்டிருந்தன. இவ்வாறெல்லாம் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் ஒரு பகுதியை இரண்டாம் சந்தேகநபர் விற்றபோது அவற்றை நகைத்தொழிலாளியான ஏழாலை வடக்கைச் சேர்ந்த இராசதுரை ராகுலன் என்பவர் கொள்வனவு செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நீதிமன்ற உத்தரவை அடுத்து மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். பின்னர் நகைத் தொழிலாளியான ராகுலன் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவரது சார்பில் சட்டத்தரணி மு.றெமிடியஸ் வாதாடினார்.

கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய முதலாம் சந்தேக நபரான அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த துரைராஜா அன்ரன் அமலநேசன் சார்பில் சட்டத்தரணி ஜோனி மதுரநாயகமும் இரண்டாம் சந்தேக நபரான யாழ். 5ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த பத்மநாதன் சுமந்தன் சார்பில் சட்டத்தரணி வி.தவபாலனும் முன்னிலையாகி இருந்தனர். இவ்விரண்டு சந்தேக நபர்களும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஒ-04)

# குகநாதன் மீதான தாக்குதல் வழக்கு; சந்தேக நபருக்கு பிணை அனுமதி

யாழ்ப்பாணம், பெப்.26

'உதயன்' செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதனைத் தாக்கினார் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபருக்கு யாழ். நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

சந்தேகநபர் நான்கு தடவைகள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்ட போதும், நான்கு தடவைகளும் பொலிஸார் சந்தேக நபருக்கு எதிரான மேலதிக அறிக்கைகளைச் சமர்ப்பிக்காததால் சந்தேக நபருக்குப் பிணை அனுமதி வழங்கப்பட்டது.

யாழ். நல்லூர் வடக்கு, ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சந்திரகுமார் (வயது-28) என்பவரே சந்தேக நபராவார். சந்தேகநபர் அதே இடத்திலுள்ள தவராசா என்பவரது மரக்காலையில் வேலை செய்து வந்துள்ளார்.

சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த போது நான்கு தடவைகள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தார். ஆனால் நான்கு தடவைகளும் சந்தேக நபருக்கு எதிராகப் பொலிஸார் மேலதிக அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்கவில்லை.

சந்தேகநபர் சார்பில் வாதாடிய சட்டத்தரணி எஸ்.செலஸ்ரீன் சந்தேகநபர் பலமாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தாக்குதலுக்குள்ளான முறைப்பாட்டுக் காரர் நீதிமன்றில் சமுகமளித்திருக்கவில்லை. அவர் தற்போது வெளிநாடொன்றில் அகதி அந்தஸ்துப் பெற்று வாழ்கிறார் என்று கூறி சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்குமாறு பல தடவை மன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

பிணை விண்ணப்பத்தைப் பரிசீலித்த நீதிவான் மா.கணேசராஜா பொலிஸார் மேலதிக அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியிருந்ததனால் சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்க அனுமதி வழங்கினார். இந்த வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 29ஆம் திகதி செய்தி ஆசிரியர் குகநாதன் இரவு 7.30 மணியளவில் உதயன் அலுவலகத்திலிருந்து அருகிலுள்ள தனது வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்த போது இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டிருந்தார். நாவலர் வீதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் பின்னந் தலையில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-04)

# என்றும் மறக்க முடியாத பேரிடர்



ஜப்பான் நாட்டை உலுக்கிய (2011.3.11) பூகம்பம் மற்றும் சுனாமி அழிவுகளின் ஒரு வருட பூர்த்தியை நெருங்கியுள்ள நிலையில், மியாகோ நகரின் அந்தப் பேரழிவைக் காட்டும் படம்.

# யாழ். பல்கலையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் பிரிவு 'ஏ' யின் ஏற்பாட்டில் "Elephants' எனும் தொனிப் பொருளிவான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பௌதிகவியல் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வளவாளராகப் பெங்களூர் இந்திய நிறுவனத்தின் சூழலியல் விஞ்ஞானத்துக்கான நிலையத்தின் தலைவர் பேராசிரியர் ராமன் சுகுமார் கலந்து கொள்வார் என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான சங்கத்தின் செயலாளர் திருமதி டாக்டர் ஏ.சிவரூபன் அறிவித்துள்ளார். (ஒ-15-13)

# சனசமூக நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.26

புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத் திறப்பு விழா இன்று நண்பகல் 12 மணிக்கு நிலையத் தலைவர் க.குகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சட்டத்தரணி சபா.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-க-14)

# புலிகளின் கொலைகளுக்கு கூட்டமைப்பு பதில் சொல்லியே ஆகவேண்டும் – பஸில்

கொழும்பு, பெப்.26

விடுதலைப் புலிகள் இயகத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் அனைத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பதில் சொல்லியாக வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ.

2001 மற்றும் 2004 தேர்தளின்போது தமிழ்க் கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தாமே விடுதலைப் புலிகளின் நேரடிப் பிரதிநிதிகள் என்று தெரிவித்திருக்கிறார்கள் என்று கூறிய அமைச்சர், எனவே புலிகளால் கொல்லப்பட்ட மக்களதும் அரசியல் தலைவர்களதும் உறவினர்களுக்கு கூட்டமைப்பே பதில் சொல்லியாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பொருளாதார அமைச்சு அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை அவர் விசேட செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

புலிகளால் கொல்லப்பட்ட மக்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் உறவினர்களிடம் இருந்து தமக்கு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று அவர் அப்போது கூறினார். ''அந்த அறிக்கைகளுடன் அவர்கள் ஜெனிவாவுக்கு விமானம் ஏறிவிட்டார்கள்'' என்றார் பஸில்.

''ஜெனிவாவில் அவர்களது கேள்விகளுக்கும் கூட்டமைப்பு பதில் சொல்லியாகவேண்டும். மனிதாபிமான மீட்புப் போரில் மனித உரிமைகளுக்கு அரசு முக்கியத்துவம் வழங்கியது. இனங்களுக்கு இடையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு மிகக் கடுமையாக உழைக்கிறது என்பது உலகத்துக்குத் தெரியும்.



போரின் பக்கங்களைத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருப்பது பொருத்தமானதல்ல. காத்தான்குடி மசூதியிலும் தெஹிவளை ரயில் நிலையத்திலும் அனுராதபுரம் சிறி மகா போதியிலும் கொழும்பு கோட்டையிலும் விடுதலைப் புலிகளால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அந்தக் கடந்த காலங்களை எல்லாம் அவர்கள் மறந்துவிட்டு ஒற்றுமையுடன் வாழ முயற்சிக்கிறார்கள்'' - என்று பஸில் மேலும் தெரிவித்தார். (உ-01)

# யாழ். சிறைச்சாலையில் இருக்கும் சிங்களக் கைதிக்கு காசநோய்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாகவுள்ள தென் இலங்கையைச் சேர்ந்த நபருக்கு காசநோய் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி சி.யமுனானந்தா மேற்கொண்ட மருத்துவப் பரிசோதனையின் போதே நேற்று இது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கைதிகளுக்கான மாதாந்த மருத்துவப் பரிசோதனை கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது. அந்தப் பரிசோதனை மூலமே காசநோய்த் தாக்கம் குறித்த கைதிக்கு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

காசநோயின் பரம்பல் குடாநாட்டில் தற்போது முழுக் கட்டுப்பாட்டில் உள்ளது.

காசநோய்த் தொற்று ஏற்பட்டுள்ள கைதிக்கு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அவரைத் தொடர்ந்தும் சிறைக்குள் ஏனைய கைதிகளுடன் வைத்திருப்பது ஆரோக்கியமல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கழிவிரக்கக் கருத்துக்களால் தேசிய அடையாளம் சாத்தியமா?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாக இருக்கும் வேளையில், இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும் என்று கோரி, மேற்கு நாடுகளால் கொண்டுவரப்பட உள்ள பிரேரணையால், தெற்கில் பெரும் திகில் மற்றும் எதிர்ப்பு உணர்வுகள் பீறிட்டுப் பாய்கின்றன. இன்னும் இரண்டொரு நாள்களில் அவை உத்வேகம் கொண்டு எதிர்ப்புப் போராட்டங்களாக வெடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சந்தர்ப்பத்தில், இதுவரை ஏற்கனவே ஒரு தேசம் என்ற வகையில் நாட்டை ஆட்சி செய்த அரசுகள் மட்டுமன்றி, அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி, அவர்களை இயக்கியவர்களும், அவ்வப்போது பிரதான கட்சிகளின் மூளையங்களாகச் செயற்பட்டவர்களும் விட்ட தவறுகள் குறித்த கழிவிரக்கக் கருத்துக்கள் தெற்கில் மேல் எழுந்து வருகின்றன.

நாட்டில் சகல பிரசைகளும், சகல இனங்களும் சமமானவர்களே என்ற உணர்வு ஊறும் வகையில், தேசிய அடையாள முத்திரை அல்லது மனஎழுச்சி பிறப்பதற்கு, நாட்டை ஆண்டு அனுபவித்த எந்த அரசுமோ அல்லது அவற்றின் ஆட்சித் தலைவர்களோ உருவாக்கவில்லை. அது குறித்துக் கிஞ்சித்தும் எண்ணியதும் இல்லை.

அதற்கான மூல காரணத்தை, வெள்ளம் வீட்டு வாசல் வரை உயர்ந்த பின்னரே - இப்போதே - அலசுவதற்கு ஆரம்பித்துள்ளன. அதற்கான காரணங்களில் மிக முக்கியமானதை இனங்காண முனைந்துள்ளன.

நாட்டின் சகல பகுதிகளிலும், பிரதேசங்களிலும் வாழும் மக்கள் எல்லோரும் தேசிய அரசியலுக்குள் இணைவதனைத் தடுக்கும் போக்கு அல்லது தன்மை தென்னிலங்கை ஆட்சியாளர்களிடம் மிகுந்திருந்தது. இன்னொரு வகையில் சொல்வதானால்-தமிழர்கள்-சிறுபான்மையினர் தேசிய அரசியலுக்குள் உள்வாங்கப்படுவதற்கு எந்த வகையான உள்ளீடுகளும், மேலோங்கவும் இல்லை; அதற்கு ஊக்கம் தரும் செயல் முறைகளும் தோற்றுவிக்கப்படவில்லை.

தலைக்கு மேல் வெள்ளம் வரும் தறுவாயில், சிறுபான்மை இனத்தவர்கள் தாமும் இந்நாட்டுப் பிரசைகள் என்று உள்ளூர உணர்வு பூர்வமாக நினைக்க வைக்கத் தாம் தவறிவிட்டோம்; அதனை இப்போதாவது திருத்திக்கொள்ள வேண்டும் என்று வாய் பிளக்கிறார்கள்.

இன விவகாரம் பூதாகரமாக வெடித்ததால், நாட்டின் சகல மக்களையும் தேசிய அடையாளத்துக்குள் சேர்த்துக் கொள்ளவில்லை என்ற நொண்டித்தனமான சாட்டுகளை வெளிப்படுத்திக் கழிவிரக்கம் கொள்ளும் - தெரிவிக்கும் - தரப்புகளும் இப்போது தலைகாட்டுகின்றன.

அது மட்டுமன்றி, நாட்டின் பிரதான அரசியல் நீரோட்டத்திற்குள் தம்மை இணைத்து இனம் காட்டிக்கொள்ள அனைத்துச் சமூகங்களும், அதாவது எல்லா இனத்தவர்களும் முன்வர வேண்டும் என்று போதிக்கவும் தொடங்கி உள்ளன.

அதற்கும் மேலாக, பிராந்திய, பிரதேச, இன, மத வேறுபாடின்றித் தேசிய நல்லிணக்கம் கட்டி எழுப்பப்பட வேண்டும். நாட்டின் எந்தப் பிரசையும் தான் தேசிய நீரோட்டத்தின் ஓர் ஊற்று என்று நம்பத் தகுந்த மாற்றங்கள் தேவை எனத் தத்துவம் பேசவும் முற்பட்டுள்ளன.

இதுவரை தமது பிரித்தாளும், புறமொதுக்கி ஆளும் நுட்பங்களையும் இனவாதச் சூட்சுமங்களையும் கட்டவிழ்த்துவிட்டு, நீண்ட போருக்கு வித்திட்ட அரசியல் வகையறாக்கள் கூட -

இப்போது -

நாட்டின் எந்தப் பிரசையும், தான் இந்த நாட்டின் பிரதான நீரோட்டத்தின் பங்காளி என்று நினைக்கும் விதத்தில் தேசிய நல்லிணக்கம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று துடித்துப் பதைத்து, உரத்துக் கத்துகின்றன. இது போன்ற பம்மாத்துக்கள் எந்தக் காலத்திலும் தேசிய நல்லிணக்கத்தையோ, சிறுபான்மையினரைத் திசை திருப்பவோ உதவாது.

போர்க் குற்றச்சாட்டுக்கள் எழுந்ததும், அது குறித்துச் சர்வதேச விசாரணை அவசியம் என்று மனித உரிமைகளில் கரிசனை கொண்ட தரப்புகள் குரல் கொடுத்ததும் - அதற்கு ஈடு செய்யவும், சமன்படுத்தல் செய்வதாக வெளித் தோற்றத்துக்குக் காட்டும் பொருட்டும், நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்த போதிலும் -

அக்குழுவின் பயன் தரத்தக்க சில சிபார்சுகளைத் தானும் நடைமுறையாக்கக் கரிசனை காட்டாத அரசுக்கு, சிறுபான்மை இன மக்களையும் பிரதான நீரோட்டத்தில் சேர்ப்பதற்கு விருப்பம் வருமோ என்பது கேள்விக்குரியதே.

நாட்டின் சகல பிரதேசங்களையும் பிராந்தியங்களையும் சம மட்டத்தில் அபிவிருத்தி செய்வதன் மூலம், இன நல்லிணக்கத்தை உருவாக்க முடியும் என்ற சித்தாந்தத்தை-இல்லை, இல்லைக் கோட்பாட்டைக் - கூறிக்கொண்டு காலத்தைப் போக்குவதும் ஒரு வகையான அரசியல் தகிடுதத்தமே. அது கோட்பாட்டின் தவறன்று. அதனைச் செயற்படுத்துவதாகக் காட்டிக்கொண்டு, பல உள்நோக்கங்களைப் புகுத்தி, குறிப்பிட்ட பிரதேச மக்கள் ஏனைய உரிமைகளை மறந்து போகச் செய்வது எல்லாவற்றையும் மிஞ்சிய கேடாகவே முடியும். வெறும் வெளிப் பேச்சினதும், பிரசங்கத்தினதும் ஊடாக, இனரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அவர்களது உரிமைகள் கைக்கு வந்து சேரா.

சிறுபான்மையினரின் பிரிக்கப்பட முடியாத அரசியல் உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தென்னிலங்கையின் அரசியல் தலைவர்கள் அறிவு பூர்வமாகவும், நியாயத்தின் வழி நின்றும் சிந்தித்துச் செயற்பட முன்வராவிடில், யாவும் பயனற்ற முயற்சிகளாகவே தொடரும்.

செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

# வடக்கு ஆசிரியர் இடமாற்றம் மார்ச் 15 இல் நடைமுறைக்கு

**வடமாகாணத்தின் ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வருகிறது.**

**மார்ச் முதலாம் திகதி இடமாற்ற ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும்**

யாழ்ப்பாணம்,பெப்.26

வடக்கு மாகாணத்தில் ஒத்தி வைக்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வருகிறது என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கூட்டம் நேற்று வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாணத்தின் ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைமுறைக்கு வருகிறது. மார்ச் முதலாம் திகதி இடமாற்ற ஆசிரியர்களின் பெயர் விவரங்கள் வடக்கு மாகாண சபையின் இணையத்தளம் மூலம் அறிவிக்கப்படும் என ஆளுநர் தெரிவித்துள்ளார். இடமாற்றத்துக்குத் தகுதியிருந்தும் அந்த இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்ட ஆசிரியர்கள் தமது விண்ணப்பத்தைத் தொழிற் சங்கங்களின் பிரசன்னத்துடன் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் மேலும் கூறினார்.

அதிபர் இடமாற்றத்துக்கான இடமாற்றச் சபையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் தொழிற் சங்கத்தினர் அங்கம் வகிக்க வேண்டும். மே மாதம் அதிபர் இடமாற்றம் நடைமுறைக்கு வருவதாகவும் இந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

மேலும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடமாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்டவர்களைக் கொண்ட உயர் மட்டக் குழுவொன்று நியமிக் கப்பட வேண்டும் எனவும் மேலதிக ஆசிரியர்கள், பற்றாக்குறையாக வுள்ள ஆசிரியர்களின் விவரங்க ளைப் பாடரீதியாக அந்தக் குழு சேகரிக்கும் எனவும் ஆளுநரால் கூறப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கல்வித் துறை சார்ந்த உயர் அதிகாரிகள், ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(த-3)

## மீன்பிடித் துறைமுகங்களை சீரமைப்பதற்குத் திட்டம்

இலங்கையின் அனைத்து மீன் பிடித் துறைமுகங்களும் சீரமைக்கப்படவுள்ளதாகவும்அதன் முதற்கட்டப் பணிகள் மிரிஸ்ஸ மீன் பிடித் துறைமுகத்திலிருந்து நேற்று முதல் ஆரம்பிக்கப்பிக்கப்பட்டதாகவும் இலங்கைத் துறைமுகங்கள் மீன்பிடிக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் மீன் பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத் தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் லால் சமரசிங்க இதனைத் தெரிவித்தார் .

மீன் பிடித் துறைமுகங்களைச் சீரமைக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் ஐஸ் உற்பத்தி, நீர், எரிவாயு மற்றும் எரிபொருள்கள், மீன்பிடிக்கலங்களை நிறுத்தி வைப்பதற்கான வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் துறைமுகங்களிலேயே ஏற்படுத்திக் கொடுக்கப் படவுள்ளதுடன் ஒவ்வொரு துறைமுகங்களின் நுழைவாயில்களிலும் துறைமுக வசதிகளைக் காட்டும் வரைபடங்களும் வைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (த-22)

## மாட்டுவண்டி ம.எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.கரையோரப் பகுதியில் மாட்டு வண்டி மூலம் மண்ணெண்ணெய் வியாபாரம் செய்வோரின் நடவடிக்கை பிசுபிசுத்து விட்டது.

தற்போது மண்ணெண்ணெய்யின் விலை லீற்றர் 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டதால் மண்ணெண்ணெய் விற்பனை கரையோரப் பகுதியில் பாதிக்கப்பட்டதாக மாட்டு வண்டி வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னர் மண்ணெண்ணெய் லீற்றர் 71 ரூபா 60 சதம் விற்ற சமயம் மண்ணெண்ணெய்யை மாட்டு வண்டி மூலம் கொண்டு சென்று தாராளமாக விற்கமுடிந்தது. குறிப்பாக, கரையோரத்தில் மீனவர்களும் மற்றும் கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளில் மாட்டு வண்டி மூலமான மண்ணெண்ணெய் வியாபாரம் விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

தற்போதைய விலை அதிகரிப்பால் இந்தப் பகுதி மக்கள் மண்ணெண்ணெய் கொள்வனவில் அதிக கவனம் செலுத்தவில்லை என்றார் அந்த மாட்டு வண்டி மண்ணெண்ணெய் வியாபாரி.

கரையோரப் பகுதி மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலுக்கும், மற்றும் ஏனைய மக்கள் சமையல் அடுப்புக்கும் இந்த மண்ணெண்ணெய்யை அதிகளவில் பெற்று வந்தனர்.

மண்ணெண்ணெய் விலை அதிகரிப்பால் சமையல் அடுப்புக்களைப் பயன்படுத்துவதையும் கரையோரப் பகுதி மக்கள் அதிகளவில் தவிர்த்துள்ளனர்.

(வ-17)

## நிகழ்வுகள் இன்று

### ஆண்டு நிறைவு

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப் பொதுக் கூட்டமும் காலை 8.30 மணிக்கு கலட்டி சீனியர் ஒழுங்கையில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

(த-14)

### நூல் வெளியீடு

வேதநாயகம் தபேந்திரனின் ''பூத்திடும் பனந்தோப்பு'' நூல் வெளியீட்டு விழா முற்பகல் 10 மணிக்கு யாழ். நாவலர் வீதி தியாகிகள் அறக் கொடை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(த-14)

* * *

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கலைவாணி இராமநாதன் எழுதிய ''இந்திய மெய்யியற் சிந்தனையில் வேதாந்தம் - சித்தாந்தம் கூறும் கடவுட் கொள்கை'' மற்றும் பண்டிதர் த.சுப்பிரமணியம் எழுதிய ''சைவ புண்ணிய காலம்'' ஆகிய நூல்கள் வெளியீட்டு விழா பிற்பகல் 4.30 மணிக்கு இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சக்தி இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் கலந்து கொள்வார்.

(த-14)

### ஜெயந்தி விழா

இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஜெயந்தி விழா சிறப்பு நிகழ்வுகள்காலை8மணி முதல் இல.17, மருதனார் மடம் வீதி, உரும்பிராய்ச் சந்தியில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(த-14)

### இலவசத்துணி வழங்கல்

அரியாலை சமூக அபிவிருத்தி சங்கத்தினால் இலவசத் துணி வழங்கும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் ஆனந்தன் வடலி வீதியில் இடம்பெறவுள்ளது. (த-14)

### செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித் திட்ட செயலமர்வு இன்றும் நாளையும் வரணி ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

(த-9)

### கூட்டம்

யாழ்.சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் முற்பகல் 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(த-51)

* * *

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9 மணிக்கு அல்வாய் கிழக்கில் அமைந்துள்ள நிறுவனத்தில் நடைபெறும்.

பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் கலந்து கொள்வார்.

(த-8)

### ஒன்று கூடல்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வருடாந்த ஒன்று கூடல் முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலையில் மாநாட்டு மண்டபத்தில் வைத்தியசாலை அத்தியட்சகர் எ.ஜெயகுமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(த-300)

## மருத்துவ உதவியாளர் பயிற்சி

O/L தகமையுடன் கற்கலாம்.
கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்புடனான பயிற்சி நெறி.
M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.
Fee : 12,500/= (4/6 Months)
லாவா வைத்தியசாலையில் பயிற்சி.

**Knowledge Universe**
No 75, Temple Road, Jaffna
Call : 0776458253

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மேற்கு, சங்கரத்தை சந்திக்கு அருகில் கலட்டி வீதியில் வீடு கட்டக்கூடிய 8 பரப்புக்காணி, பயன்தரு மரங்களுடன் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு 0773795291, 0112626262 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

இல 100 இராமநாதன் வீதி நாயன்மார்கட்டு முகவரியில் உள்ள வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:-0770396467

## வேலை ஆட்கள் தேவை

சோடாப்போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்கு வதற்கு வேலையாள்கள் தேவை.
தொ.இல:-0778980150
0758371308

## பெண் உதவியாளர் தேவை

நல்லூரடியில் உள்ள வேலைக்குச் செல் லும் குடும்பம் ஒன்றுக்கு சிறுபிள்ளையை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற் கும் - பெண் உதவியாளர் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்குத் தங்குமிடம், உணவு இலவசம்.
தொடர்பு : 0750481186.

## விற்பனைக்கு

57, ஆசனங்களைக் கொண்ட இல. N P - NA xxxx TATA star bus விற்பனைக்கு உண்டு (பாதை அனுமதிப்பத்திரம் உண்டு)
தொடர்புகளுக்கு: 0779591525

## வாடகைக்கு

ஓட்டுமடம் வீதியில் 17/1 இலக்கமுடைய 5 அறைகளை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:-
பிறேமகுமார் (J.P) 0771907451.

## வீடு, காணி விற்பனைக்கு

இளவாலையில் 5 பரப்புக் காணியும், புதிய வீடும், பண்டத்தரிப்பில் பத்திமா ஆல யத்துக்கு அருகில் 11 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர் : 021 2250593, 0213002371, 0776333025

## விற்பனைக்கு

ISUZU 2008 model ,250, உடன் விற்ப னைக்கு.
தொடர்பு:-0774525197,0779760681

## வீடு வாடகைக்கு

கொக்குவிலில் சகல வசதி களுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
✱பல்கலைக் கழக மாணவிகள்,
✱வெளி மாவட்ட ஆசிரியைகள் விரும்பத் தக்கது.
தொடர்பு:
0750970638

NEW ERA ACADEMY
English Teacher Training Diploma
BRITISH EXSAMINATIONS

Do you want to start your own English Pre-school or Junior English Classes?
Follow our
**Pre Diploma & Diploma**

courses in English Teacher Training from **New Era Academy – London**

We will provide all the Books and Resource materials to start your own English Class on successful completion of the Diploma

Programme
Registrations are now open

Classes commence on 3rd March 2012

spectra skills 19 Stanley Road, Jaffna
Tel: 021 222 1422 or 1423;
Email: Jaffna@spectraskills.com

## பிடவை விற்பனையாளர் தேவை

13A, யாழ்றெக்ஸ் சாவகச்சேரியில் இயங்கும் பிடவை ஸ்தாபனத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு சம்பளம் பேசித்தீர்க்கப் படும். அடிப்படைச் சம்பளம் 7500/= 27.02.2012 திங்கள் காலை 8 மணிக்கு மேற்படி ஸ்தாபனத்துக்கு நேரில் சமுகமளிக்கவும்.

**யாழ்றெக்ஸ்,**
**இல 13A நவீனசந்தை சாவகச்சேரி.**

# தொழில் வாய்ப்புகள்

வெளிநாட்டில் தலைமையகத்தை உடைய உலகரீதியில் முதலிடத்தை வகிக்கும் பிரபலமான காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

i) Insurance Sales Associate - Life
ii) Financial Service Consultant - Life
iii) Agency Leader - Life
iv) Associate Agency Manager - Life
v) Agency Manager - Life
vi) Business Distribution Manager - Life
vii) Junior Business Executive - General
viii) Business Executive - General

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**

- க.பொ.த. உயர்தர பிரிவில் சித்தியடைந்திருத்தல்
- க.பொ.த. சாதாரண தரத்தில் கணிதபாடம் உட்பட 6 பாடத்தில் சித்தி
- ஏற்கனவே காப்புறுதி துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு அவர்களின் திறமைக்கேற்ப பதவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வழங்கப்படும் அனுகூலங்கள் :**

- பதவிகளுக்கேற்றவாறான அடிப்படைச் சம்பளம், போக்குவரத்துச் செலவு, வாகனத்திற்கான வாடகை கொடுப்பனவு, ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- இத்துறையில் அனுபவமற்றவர்களுக்கு 2 மாதகால பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- பயிற்சிக்கால முடிவில் அரசாங்கத்தால் நடத்தப்படும் காப்புறுதி தகைமை சான்றிதழிற்கான பரீட்சை எழுதுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும்.
- அதில் சித்தியடைபவர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.
- வெளிநாட்டு சுற்றுலா வசதி வாய்ப்புகள்.
- வெளிநாட்டு சான்றுடன் கூடிய விருதுகள்.

**நீங்கள் செய்ய வேண்டியது**

உங்களது சுயவிவரக் கோவையை நீங்கள் விரும்பும் பதவியினை இடது பக்கம் மேல் மூலையில் குறிப்பிட்டு தொலைபேசி இலக்கத்தினையும் குறிப் பிட்டு கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு 04.03.2012 இற்கு முன் கிடைக்க கூடிய தாக அனுப்பவும்.

மே.பா. உதயன், விளம்பர இல. 4225,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வாடகைக்கு

பல்கலைக்கழகத்துக்கு அருகில் சகல வசதிகளுடனான 2 அறை வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
0773144593

## சிங்கள வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. பேச, எழுத, வாசிக்க அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## ஆங்கில வகுப்புகள்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர் கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம் பமாகின்றன. இலகுவாக பேச, வாசிக்க வெளிநாட் டில் கற்பித்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும்.
[தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்] NORTH LEAD
328 A, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ். நகரப்பகுதியில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையத்துக்கு கணினி தட்டச்சு, போட்டோ பிரதிசெய்தல் போன்றவற்றில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் வேலைக்கு தேவை.
சுயவிவரக்கோவைஅனுப்புவதற்கு:-
hariemail@yahoo.co.uk
தொடர்புக்கு:-0775380981

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூரில் யாழ். பல்கலைக்கழகத் துக்கு அண்மையில் மூன்று (3) படுக்கை அறை களைக் கொண்ட வீடு சிறிய குடும்பத்துக்கு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
0016472860590,0789111645
Bshans2@gmail.com
(14938)(2-6)

## வீடு வாடகைக்குதேவை

அரச தொழில் புரியும் சிறிய குடும்பத் துக்கு யாழ்நகரின் அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புகளுக்கு:-0715683311

# மரண அறிவித்தல்கள்

## தம்பு ஜெயரட்ணம்



இல. 14, 2ஆம் குறுக்கு வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு ஜெயரட்ணம் நேற்று (25.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - கனகம்மா தம்பதியரின் அன்பு மகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 14,
2 ஆம் குறுக்கு வீதி,
நல்லூர்

தகவல் :
க.ரவீந்திரன் (மருமகன்)
சந்திராதேவி - கனகரட்ணம் (சகோதரி)
(15084)

## மாசிலான் அன்ரனிதாஸ்



நாவாந்துறை, மண்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாசிலான் அன்ரனிதாஸ் நேற்று (25.02.2012) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலான் மற்றும் ரதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் அருள் மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மராணியின் அன்புக் கணவரும், ஜான்சிராணி, ஜான்சன், அலெக்ஸ்சன், ஜானி, தனுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அபியின் அன்பு மாமனும், சகானா, டன்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சென். நீக்லஸ் தேவாலயத்தில் நாளை (27.02.2012) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சேமத்தாலயம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, மண்பிட்டி,
நாவாந்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

## குஞ்சன் கிருஸ்ணன்



எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப் பிடமாகவும், இணுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட குஞ்சன் கிருஸ் ணன் நேற்றுமுன்தினம் (24.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் றேணுகா, பிரகாஸ், பிரசாத், ரேகா ஆகியோரின் அன்புத் தந்தையும் நிகிதாவின் பாசமிகு பெரிய தகப்பனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, தக னக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் இணு வில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

"மணிமகால்"
தியேட்டர் வீதி,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பத்மரஞ்சினி குகதாசன் (சண்டிலிப்பாய்)

சீரணி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி பத்மரஞ்சினி குகதாசன் 24.02.2012 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சண்டிலிப்பாயை சேர்ந்த காலஞ்சென்ற சோம சுந்தரம் மற்றும் நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், உடுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இளைப்பாறிய பொலிஸ் பரிசோதகர் நாகலிங்கம் குகதாசன் அவர்களின் அன்பு மனை வியும், சரோஜினி (பிரான்ஸ்), சுபாஜினி (பிரான்ஸ்) ஆகியோ ரின் அன்புத் தாயும், ராதாகிருஸ்ணன், சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், பத்மசுந்தரி, காலஞ்சென்ற பத்ம நாதன் மற்றும் பத்மநேசன், திலகவதி, பத்மதேவன், பத்ம ஜோதி, பத்மானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகுரு நாதன், காலஞ்சென்றவர்களான சந்திராவதி, ஜெகதீஸ்வரி மற்றும் ஜேனாதிபதி, நாகராஜேஸ்வரி, சிவனேசன், புஷ்பா ஆகியோ ரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (26.02.2012) ஞாயிற் றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல் லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக, மானிப் பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சீரணி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

# ரயில்பாதை புனரமைப்பு பார்வையிட குழு வருகை

யாழ்ப்பாணம், பெப்.26
யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுவரும் ரயில் பாதை புனரமைப்பு பணிகளைப் பார்வையிடுவதற்காக ரயில்வே திணைக்களத்தின் உயரதிகாரிகள் குழு ஒன்று யாழ். வந்துள்ளது.

இந்தக் குழுவினர் ரயில் பாதை புனரமைப்புகள் நடைபெறும் ரயில் நிலையத்துக்குச் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

இது குறித்து ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் கூறுகையில்:

யாழ். ரயில் நிலையத்தில் இருந்து தச்சன் தோப்பு வரையான ரயில் பாதையின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் பாதைக்கான தண்டவாளங்கள் இந்தியாவில் இருந்து விரைவில் இங்கே எடுத்து வரப்படவுள்ளன. இதற்காக இந்திய நிறுவனப் பிரதிநிதிகள் அங்கு சென்றுள்ளனர். (த-17)

# 'ஏ' தர உணவகங்களில் பயப்படாமல் சாப்பிடுங்கள்

### சுகாதாரப் பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம் .பெப். 26
சீர்கேடான வகையில் உணவு தயாரிக்கும் மற்றும் விற்பனை செய்யும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்து தண்டிக்கப் பட்டபோதும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. தண்டனை கொடுக்கப்பட்டும் எதுவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

உணவகங்களின் தரத்தை வைத்து அவற்றை ஏ,பி,சி,டி எனத் தரம்பிரிக்கவுள்ளோம். ஏ,பி தர உணவகங்களில் மக்கள் பயப்படாமல் சாப்பிட முடியும்.

இவ்வாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சீர்கேடான வகையில் உணவு தயாரிக்கும், உணவு விற்பனை செய்யும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தோம்.

அதனையும்விட அதிகளவில் சீர்கேடாக இயங்கும் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்தோம். அவர்கள் நீதிமன்றங்களால் அபராதம் செலுத்தித் தண்டிக்கப்பட்ட போதும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இவ்வாறு சீர்கேடான வகையில் செயற்படும் உணவகங்களும் உணவு கையாளும் நிலையங்களும் இனங்காணப்பட்டு அவற்றைப் புறமொதுக்குவதும் தரமான உணவு கையாளும் நிலையங்களை இனங்கண்டு நாடிச் செல்வதும் பொதுமக்களினது கைகளில் தங்கியுள்ளது.

பொதுமக்கள் இலகுவில் பார்த்து உணர்ந்து கொள்ளும் வகையில் உணவு கையாளும் நிலையங்கள் ஏ,பி,சி,டி என வகைப்படுத்தப்படவுள்ளன.

இவற்றில் 'ஏ' மிகத்தரமான நிலையமாகக் கணிக்கப்படும். 'பி' தரமான நிலையமாகக் கணிக்கப்படும். 'சி' உரிய வகையில் இயங்கவில்லை எனக் கணிக்கப்படும். இந்தத் தரங்கள்பற்றிஒவ்வொருநிலையத்தினதும் முன்பக்கம் அவை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். ஏ,பி என்பனவற்றுக்கு பொது மக்கள் செல்லமுடியும். ஏனையவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

'டி' வகையென இனங்காணப்படும் நிலையங்கள் உடனடியாக இழுத்து மூடப்பட்டு விடும். பல நிலையங்கள் இவ்வாறு மூடப்பட்டுள்ளன.

ஏ, பி, சி, டி என்ற வகையினதான சான்றிதழ்கள் வெகுவிரைவில் நிலையங்களுக்கு முன்பாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளன. எனவே அவற்றை இனங்கண்டு செயற்படுங்கள் என்றார். (த-4)

# செம்மணி மயானத்துக்கு மதில்



யாழ்ப்பாணம் .பெப். 26
நல்லூர்ப் பிரதேச சபைக்குட்பட்ட செம்மணி இந்து மயானம் பிரதேச சபையின் தீவிர முயற்சியால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுச் சுற்று மதில் அமைக்கப்பட்டு வருகின்றது.

செம்மணி வீதியின் இரு பக்கமும் மயானங்கள் உள்ள போதும் தெற்குப் பக்க மயானம் சுற்று மதில் இல்லாத காரணத்தால், விஷமிகள் பலரும் தமது வீட்டுக் கழிவுகள் மற்றும் கொல்களங்களில் சேகரிக்கப்படும் மிருகக் கழிவுகள் ஆகியவற்றை இந்த மயான வளவிலே கொட்டி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பிரதேச சபையினர் உடனடி நடவடிக்கையா... மயானத்துக்குச் சொந்தமான அந்தக் காணியைச் சுற்றி மதிலை அமைக்கத் தீர்மானம் எடுத்தனர். இதனடிப் படையில் மிக விரைவாக அந்த மதில் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

தற்போது 'முன்பக்கச் சுற்றுமதில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பகுதிகளுக்கான மதில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.(த-288)

# குற்றமற்ற கிராமத் திட்டத்தில் குடாநாட்டில் ஐந்து கிராமங்கள்

யாழ்ப்பாணம்.பெப்.26
குடாநாட்டில் குற்றமற்ற கிராமங்களை உருவாக்குவோம் என்ற திட்டத் தின் கீழ் ஐந்து கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கோண்டாவில், அரியாலை வட மேற்கு, குமரகோட்டம், நாவாந்துறை, பாசையூர் ஆகிய கிராமங்களே குற்றமற்ற கிராமங்களாக மாற்றுவதற்கு தெரிவாகியுள்ளன என்று யாழ்.மதுவரித்திணைக்களப் பரிசோதகர் என் கிருபாகரன் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வடமாகாண மது வரித் திணைக்கள ஆணையாளர் கிறிஸ்றி யோசப் தலைமையில் இடம்பெற்றது.

அதன் போது அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது. கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. தண்டனைகளை அனுபவித்தும் குற்றப் பணத்தைக் கட்டிவிட்டும் மீண்டும் இவ் வாறான குற்றச் செயல்களில் பெரும்பாலானோர் ஈடுபடுகின்றனர். யுத்தம் முடிவுற்ற பின்னர் வடக்கு கிழக்கில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளது.

கடுமையான சட்டங்களை அமுல்படுத்தியுள்ள போதும் இதனை ஒழிப்பது பெரும் சிரமமாகவுள்ளது. தற்போது பல்வேறு இடங்களில் போதைப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக புலனாய்வு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறோம்.

இளம் சமூகம் மது போதைக்கு அடிமைப்படாது சீர் பெறுவதற்கு மனித உரிமை ஆணைக்குழு, அரச சார்பற்ற நிறுவனங்கள் சொண்ட் மற்றும் விழுது ஆகியன ஒன்றிணைந்து விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன என்றார்

வடக்கு கிழக்கு மது வரித் திணைக்கள உத்தியோகத்தர்கள் 67 பேர் இதில் கலந்து கொண்டனர். இவர்களுக்காக மதுவரி கட்டளை சட்டங்கள் தொடர்பான விரிவு ரைகள், நிர்வாகம், முகா மைத்துவம் போன்ற கருத் தரங்குகளும் நடத்தப்பட்டன. (ம-13)

# புகைக்கூட்டின் ஊடாக நுழைந்து திருடிய சிறுவர்கள்

யாழ்ப்பாணம்.பெப்.26
சமையலறை புகைக் கூட்டினூடாக வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த நகைகளையும் குளிர்சாதனப் பெட்டியிலிருந்த இனிப்புப் பண்டங்களையும் திருடிய இரண்டு சிறார்களில் ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். மற்றையவர் தொடர்ந்தும் நன்னடத்தைப் பாடசாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரண்டு மாதத்துக்கு முன்னர் கோண்டாவிலில் இடம்பெற்ற இந்தத் திருட்டுத் தொடர்பாக இந்த வீட்டு உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பான விசாரணையின் போது அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு சிறுவர்களைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவ்விரு சிறுவர்களையும் நன்னடத்தைப் பாடசாலை யில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அந்த வழக்கே மீள விசாரணைக்கு வந்தது.

இரண்டு சிறுவர்களையும் பிணையில் விடுவிக்கும் படி அவரது பெற்றோர் மன்றில் கோரிக்கை விடுத்தனர். அவர்களில் ஒருவரை விடுவித்த நீதிவான், மற்றையவர் நன்னடத்தைப் பாடசாலையில் சரியான நடத்தையை நிரூபிக்கத் தவறியதனால் மேலும் ஒரு மாதத்துக்கு நன்னடத்தைப் பாடசாலையில் வைக்க உத்தரவிட்டார். (த-4)



நயினாதீவு நாக விகாரையில் இலங்கைக் கடற்படையினரும் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தினரும் இணைந்து நாக விகாரைக்கான இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை நயினாதீவு நாகவிகாரைக்குச் சென்ற பிரதி நிதி அமைச்சர் றஞ்சித் சியம்பலப்பிட்டிய இணையத் தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கிறார். அருகில் நாகவிகாரையின் விகாராதிபதி மற்றும் கடற்படை அதிகாரிகள் உள்ளனர். (த-250)

# கோம்பயன் மயானத்தை அண்டி வீதியில் குவிக்கப்படும் கழிவுகள்

### சுகாதாரப் பகுதியினருக்குத் தெரியாதா?

பண்டத்தரிப்பு.பெப்.26
யாழ்ப்பாணம்- மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் மாநகர சபைக் குட்பட்ட கோம்பயன் மணல் இந்து மயானத்தை அண்டிய பகுதியில் குப்பைகள் கொட்டப்பட்டு அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது.

யாழ். நகரின் பிரதான நுழை வாயில்களில் ஒன்றான இந்தப் பகுதியில் பிரதான வீதியின் இரு மருங்கிலும் குப்பைகள் கொட்டப்பட்டு அப்பகுதிகுப்பை மேடாகக் காட்சி தருகி ன்றது.



வீதியோர மரங்களில் விலங்குகளின் கழிவுகள் பைகளில்சுற்றப்பட்டுதொங்க வி டப்பட்டுள்ளன. இதுவே அந்தப் பகுதியில் கடும் துர்நாற்றத்துக்கு காரணமாகவும் உள்ளது.

இதனால் அந்தப்பகுதியில் பயணிப்போர் தமது மூக் கைப் பொத்திய படியே பய ணம் செய்கின்றார்கள்.

டெங்குஒழிப்புஎன்றபெயரில் மக்களின் வீடுகளுக்குப் படையெடுக்கும் அதிகாரிகள் நகரின் பிரதான வீதியின் நிலையினைக் கண்டு கொள்ளாதது ஏன் என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர்.

பிரதான வீதியில் உள்ள இந்த வீதியின் இரு பக்கங்களிலும் இவ்வாறு குப்பைகள் கொட்டும் செயற்பாடு நீண்ட காலமாக இடம் பெற்று வருகின்ற போதும் இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற் கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (த-130)

# நல்ல விளைச்சல்

தென்மராட்சியில் கால போக நெல் அறுவடை நிறைவடையும் நிலையில் உள்ளது. இந்த வருடம் விவசாயிகள் பூரண திருப்பதியடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. நெல் அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளதாக விவசாய சம்மேளன பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சில இடங்களில் நெல்லின் தாள்கள் அதிகமாக வளர்ச்சி அடைந்ததனால் அந்த பயிர்களில் நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் அந்த வயல் நிலங்களில் விளைச்சல் குறைந்து காணப்பட்டது.

இதேவேளை தனங்கிளப்பு வயல் வெளியில் கட்டாக்காலி மாடுகளின் தாக்கத்தால் விவசாயிகளின் நெற்பயிர்கள் சுமார் 234 ஹெக்ரேயர் நிலப் பரப்பைக் கொண்ட பயிர்களை மாடுகள் தின்று அழித்துள்ளதாகவும் கிராம உத்தியோத்தர்களினால் தெரிவிக்கப்பட்டது. (த-131)

# குருநகர் மாடிக் கட்டடம் புனரமைப்புக்காக மதிப்பீடு

யாழ்ப்பாணம்,பெப்.26
வடக்கு மாகாணத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளைத் துரிதப்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாணத்தில் உள்ள பொறியியலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

இந்தக் கலந்துரை யாடலிலேயே மேற்படி விடயம் ஆராயப்பட்டுள்ளது.

சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் எஸ். மரியதாசன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஐந்து மாவட்டங்களின் பொறியியலாளர்கள் ,தொழிநுட்பவியலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் இந்த ஆண்டு வீதி அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது .

குறிப்பாக வடக்கின் வீதி அபிவிருத்திப் பணியைத் துரிதப்படுத்துவது குறித்து இதில் ஆராயப் பட்டுள்ளது . (த-17)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** சில காரியங்களை அலைந்து, திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் பதற்றம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சித்துப் பேசாதீர்கள். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தடைகளைத் தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்:** சவாலில் வெற்றி பெறுவீர்கள். பெற்றோரின் ஆதரவுப் அதிகரிக்கும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் அதிரடியான செயற்களால் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகள் கேட்டதை வாங்கி தருவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களைச் சொல்லித் தருவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல், பதற்றம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி திரும்பும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரம் சூடுபிடிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். நிம்மதியான நாள்.

**சிங்கம்:** யாரையும் நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போகவேண்டும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். சிக்கனமாக இருங்கள். வியாபாரத்தில் புது முயற்சிகள் வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும். திட்டமிட்டவை தாமதமாக முடியும் நாள்.

**கன்னி:** மறைந்துக் கிடந்த திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**நாளை**

மாசி 15 திங்கட்கிழமை 27.02.2012
திதி: பஞ்சமி மு.ப.11.56 வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப.10.32 வரை
சுபநேரம்:12.29- 01.59 வரை,
ராகு காலம்: 07.59- 09.29 வரை

**துலாம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**விருச்சிகம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். கடையை விரிவுப்படுத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு:** முக்கிய பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்துபோகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். கலைப் பொருள்கள் வாங்குவீர்கள். தொழிலில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்:** திடமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து அதிகரிக்கும். அரசால் ஆதாயம் உண்டு. வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**கும்பம்:** கடந்த இரண்டு நாள்களாக கணவன்- மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். நீண்ட நாள்களாகப் பிற்போட்ட காரியங்கள் இன்று முடியும். விலகிச்சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். திடீர் திருப்பம் ஏற்படும் நாள்.

**மீனம்:** ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் வளைந்து கொடுத்துப் போவது நல்லது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | 2 | 9 | 1 | | 5 | 8 |
| 2 | 5 | | 6 | | | 9 | | |
| | | | | 5 | | | 1 | 7 |
| | 6 | | | 4 | | | | |
| 4 | | | 3 | | 7 | | | 2 |
| | | | | 8 | | | 6 | |
| 1 | 4 | | | 3 | | | | |
| | | 3 | | | 6 | | 7 | 9 |
| 6 | 8 | | 9 | 2 | 4 | | | 5 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 1 | 8 | 6 | 7 | 3 | 4 | 9 |
| 6 | 4 | 3 | 1 | 5 | 9 | 8 | 7 | 2 |
| 7 | 9 | 8 | 4 | 3 | 2 | 5 | 1 | 6 |
| 1 | 8 | 6 | 3 | 9 | 4 | 2 | 5 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 7 | 1 | 4 | 9 | 8 |
| 4 | 7 | 9 | 5 | 2 | 8 | 6 | 3 | 1 |
| 5 | 1 | 7 | 2 | 8 | 3 | 9 | 6 | 4 |
| 8 | 3 | 4 | 9 | 1 | 6 | 7 | 2 | 5 |
| 9 | 6 | 2 | 7 | 4 | 5 | 1 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மேரி கொல்வின்:

## பின்பற்றப்படவேண்டிய ஒரு முன்மாதிரி

(சூரியகாந்தி 3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரிமாற்றப் பணியை இறுதி நேரத்தில் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையரசுக்கு எதிரான போர்க் குற்றசாட்டில் இவர் ஒரு முக்கிய சாட்சியாகக் கருதப்பட்டார். மிகச் சர்ச்சைக்குரிய சனல்-4 தொலைக் காட்சியின் 'சிறிலங்காவின் கொலைக் களம்' ஆவணப் படத்தில் இவரது தகவல்களும் பதிவாகி இருந்தன.

2011 லிபியாவின் உள்நாட்டுப் போரை அறிக்கையிடும்போது கடாபியை மீண்டும் நேர்காணும் வாய்ப்பைப் பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோதமாகச் சிரியாவுக்குள் நுழைந்தே செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தார். சிரிய அரசு பத்திரிகையாளர்களை கிளர்ச்சி நடைபெறும் பகுதிகளுக்குள் அனுமதிக்கவில்லை பாபா அமீர் நகரத்தில் கிளர்ச்சியாளர்களின் தற்காலிக ஊடக மையத்திலிருந்து அவரது குரல் 21ஆம் திகதி பி.பி.சி, சி.என்.என், சனல்-4 மற்றும் ஐ.ரி.என். சேவைகளில் ஒலித்தது. தனது சற்றலைட் தொலைபேசியின் உதவியுடன் தனது சேவையை தொடர்ந்தபோது சற்றலைட் தொலைபேசிச்சிக்னல்களைப் பின்தொடர்ந்த சிரிய ராணுவத்தால் நடத்தப்பட்ட தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். தான் தங்கியிருந்த கட்டடம் தாக்கப் படுவது தெரிந்து தப்பி ஓடும்போது அவர் கொல்லப்பட்டார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இவரோடு பிரெஞ்சு நாட்டின் புகைப்படப் பிடிப்பாளர் ரெமி ஒச்லிக்கும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மிகத் துணிச்சலுடன் முரண்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்று தங்கியிருந்து செய்திகளை சேகரித்து உலகுக்கு உண்மைகளைக் கொண்டு வரும் மேரி கொலின் போன்றவர்கள் தாம் பணி புரியும் துறைக்கு விசுவாசமாகவும் உண்மையாகவும் பணியாற்றியிருக்கிறார். பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் அவரை முன் மாதிரியாகக் கொள்ள வேண்டும். இன்று களத்துக்கு செல்லாமால் செவி வழிச் செய்திகளை தொலைபேசிகளில் கேட்டுத் தகவல், தரவு மற்றும் நேர்த்திப் பிறள்வுகளுடன் செய்தி அறிக்கையிடும் நவீன யுகத்தில் உண்மையைத் தேடும் தனது முயற்சியில் தன் உயிரைக் கொல்வின் நீத்திருப்பது அவரது பணியில் அவர் காட்டிய விசுவாசத்தின் வெளிப்பாடு.

மேரி கொலின் எந்நதவொரு சூழ்நிலைக்குள்ளாலும் தப்பித்து வந்த விடுவார் என்ற நம்பிக்கையில் காத்திருந்த குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் மிகுந்த ஏமாற்றம் தருவதாக அவரது இறப்பு செய்தி அமைந்திருக்கிறது. எமக்கும்தான்.

தே.தேவானந்த்,
பணிப்பாளர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## வழி விடாதவர் ரூ.1,000 கட்டினார் அபராதம்

யாழ்ப்பாணம் .பெப். 26

தனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த வாகனங்களுக்கு வழிவிடாது தனது வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபருக்கு ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது .

யாழ் நகர்ப்பகுதியில் இவ்வாறு சென்ற யாழ். இராமநாதன் வீதியைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராகவே யாழ். பொலிஸார் யாழ். நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்து மன்றில் முற்படுத்தி னர்.

சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதனால் நீதிவான் மா. கனேசராஜா ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஒ-4)

## ஆபாசப்படம் பார்த்த 14 வயதுச் சிறுவன்

தென்மராட்சி .பெப். 26

ஆபாசப் படம் பார்த்த 14 வயது சிறுவனை சான்று பெற்ற பாடசாலையில் அனுமதிக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப் பட்டது.

சாவகச்சேரி நகர்ப்பகுதி நெற்கபே ஒன்றில் ஆபாசப் படங்களைப் பணம் செலுத்திப் பார்த்த சிறுவனுக்கு எதிராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை அலுவலர் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தார்.

வழக்கினை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சிறுவனை சான்று பெற்ற பாடசாலையில் அனுமதித்து மார்ச் 8 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு உத்தரவிட்டார். (த-9)

# நாம் கிறிஸ்தவர்களா?

நாம் கிறிஸ்தவர்களா? கிறிஸ்தவர்கள் என்றால் யார்? என்பது பற்றி நாம் அறிந்ததும் இல்லை, அறிய விரும்பியதும் இல்லை. நமது பிறப்பின் போது பாவத்தோடு பிறக்கின்றோம். திருமுழுக்கின் மூலம் சென்மபாவம் நீக்கப்பட்டு கிறிஸ்துவின் பிள்ளைகளாகின்றோம்.

திருமுழுக்கோடு ஆரம்பித்த கிறிஸ்தவர்கள் என்ற பெயருடன் வாழ்கின்றோம். ஆனால் உண்மையில் கிறிஸ்தவர்களாக வாழ்கின்றோமா என சிந்தித்துப் பார்ப்போம். எமது வாழ்க்கையில் கிறிஸ்துவோடு இணைந்திருந்ததைத் தேடிப்பார்ப்போம்.

எமது வாழ்க்கையில் பாவமே பரந்து காணப்படுகின்றது. தினமும் களவு, பொய், விபசாரம், குடிவெறி, சண்டை, காமவெறி, செய்வினை, பில்லி சூனியம் என்பவற்றை நாடுதல் போன்ற செயற்பாடுகள் கிறிஸ்தவர்களாகிய எம்மத்தியில் காணப்படுகின்றன.




இவ்வாறு இருக்கையில் நாம் கிறிஸ்தவர்கள் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறான வாழ்க்கைமுறை எம் தலைமுறையினரையும் தொடர்ந்து கொண்டு வருகின்றது.இந்த வாழ்க்கை முறையை கிறிஸ்து விரும்புவாரா? இல்லை இறைவன் உலகின் மேல் கொண்ட அன்பினால் தம் ஒரே மகனை உலகின் பாவங்களிற்காக பலியாக்கினார். இறைவனின் அன்பை மறந்து நாங்கள் இறைமகனை சிலுவையில் அறைந்து கொன்றோம்.ஆனால் அவரை சிலுவையில் இருந்து இன்னும் இறக்கவில்லை. ஏனெனில் அவர் எமது பாவங்களிற்காக தமது உயிரை மாய்த்துக்கொண்டார். இதனை மறந்து நாம் இன்னும் பாவிகளாகவே வாழ்ந்து வருகின்றோம்.சிலுவையில் மூன்று ஆணிகளில் தொங்கும் இறைமகனை இறக்க வேண்டுமானால் நாம் எமது பாவங்களை இறக்க வேண்டும். அதற்கு நாம் எம்மில் மனமாற்றத்தை ஆரம்பிக்க வேண்டும்.

தவக்காலத்தில் நாற்பது நாள்கள் உள்ளது.எமது மனமாற்றமானது நாற்பது நாள்களில் மட்டுமல்லாது வாழ்நாள் முழுவதும் எம்மில் காணப்பட வேண்டும். எம்மில் ஏற்படும் மனமாற்றமே எம்மை உண்மையில் கிறிஸ்தவர்களாக மாற்றும்.உண்மையான கிறிஸ்துவில் உறுதியான கிறிஸ்தவர்களாகிய எம்மில் செபம், பொறுமை, உண்மை, அன்பு, நிலையான விசுவாசம் என்பன எமக்கு மனமாற்றத்தில் கிடைக்கும் இறைபரிசாகும். மேலும் பலியான ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால் எமது பாவக் கறையைக் கழுவி முடிவில்லா வாழ்வுக்கு கிறிஸ்தவர்களாகிய நாம் தயாராகுவோம்.

எஸ். டினேஸ், குருநகர்.





வெளிநாடு செல்லும் பயணிகளின் கவனத்திற்கு!
மாதாந்த கொடுப்பனவு முறையில் விமானக் கட்டணங்களை யாழ் நகரிலும் செலுத்தலாம்
For monthly Installment
HNB Special Offer for Credit Card holders!

கொழும்பு -சென்னை 1,600/=Rtn
கொழும்பு -திருச்சி 1;450/=Rtn
கொழும்பு -மாலைதீவு 2 ,600/=Rtn
கொழும்பு -சிங்கப்பூர் 3,000/=Rtn
கொழும்பு -மலேசியா 3,350/=Rtn
கொழும்பு -லண்டன் 4,550/=Ow
கொழும்பு -பிரான்ஸ் 7,550/=Rtn
கொழும்பு -ஜேர்மனி 9,650/=Rtn
கொழும்பு -கனடா 14,600/=Rtn

Prices are subject to change without prior notice.

NATION POPULAR TRAVELS & TOURS
Head office #16 ½ , E.S. Fernando Mawatha, Colombo – 06 VISA
Tel : +94 114 65 11 99 Fax :+94 114 50 55 32
#82 பிறவுன்வீதி யாழ்ப்பாணம் (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக) Hotline: 0214 920 920
www.nationtravels.com


## குருபூசை

யாழ்ப்பாணம், பெப்.26

கோண்டாவில் கந்தையா சுவாமிகள் (குடைச்சுவாமிகள்) 34 ஆவது வருடாந்த குருபூசை எதிர்வரும் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள சமாதியில் இடம் பெறவுள்ளது. திருவாசகமுற்றோதலும் இடம் பெறும்.

(ஒ-13)


## வாடகைக்கு

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இலுப்பையடி சந்திக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

**தொடர்பு:**
**0772487989/ 0772926397**

## காணி விற்பனை

முல்லைத்தீவு, அளம்பிலில் உள்ள உடுப்புக்குளம், 5ஆம் கட்டைப் பகுதியில் முல்லைத் தீவு புல்மோட்டை திருகோணமலை பிரதான காப்பெற் வீதியில் 11 ஏக்கர் தென்னந்தோட்டக் காணி உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்புகளுக்கு:
**077 4912596**


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 14.01.2012 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

### கணேஸ் தயாளன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (25.02.2012) சனிக்கிழமை நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (27.02.2012) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்பத்துடன் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

செல்வாநகர், கிளிநொச்சி.

குடும்பத்தினர்,
செ.வாவுமாமா.

# மரண அறிவித்தல்கள்

## Dr. இரத்தினவடிவேல் மயில்வாகனம்

(வல்வெட்டித்துறை)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாக வும் கனடா, பிரம்டனை வதிவிடமாகவும், வல்வை இந்திராணி மாவட்ட வைத்தியசாலை, மந்திகை ஆதார வைத்தியசாலைகளில் கடமை புரிந்து ஓய்வு பெற்ற Dr. இரத்தினவடிவேல் மயில்வாகனம் 22.02.2012 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இரத்தினவடிவேல் - நிலவொளித் தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான காப்புக்கார சோமசுந்தரம் - ரங்கநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், திருமதி புவனேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், குமரேஸ்வரி (கனடா), Dr.குமரேந்திரன் (UK), ரவீந்திரன் (கனடா), சுரேந்திரன் (கனடா), சுவர்ணேஸ்வரி (கனடா), வனிதா (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் உதயகுமார், ஜில் (UK), தக்ஷினி, மதனரூபி, விஜயகுமாரன், முரளி ஆகியோரின் அன்பு மாமனாரும் டினேஸ், டீவா, சச்சின், சாந்தி, சஞ்சய், ரபிஷன், ரபிஷனா, மயூரி, மித்திரா, ஹரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான Dr. வெங்கடாசலம், மனோன்மணி, கண்ணகை அம்மா, பூபாலசுந்தரம் (Tug Master) Dr. குமரப்பாபிள்ளை மற்றும் சிந்தாமணி (வல்வெட்டித்துறை), காலஞ்சென்றவர்களான அம்பிகா, ஸ்ரீகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், சோதிலிங்கம், செல்வவிநாயகம் மற்றும் மாணிக்க விநாயகம் (கனடா), சின்னத்தங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (Glandale Memorial Ganden Visitation Centre) இல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2012) திங்கட்கிழமை 9.30 மணிய ளவில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

145, Zia Dodda Cres,
Brampton, ON L6P IJ3,
Canada,
001 905 794 9083.

தகவல் :
திருமதி புவனேஸ்வரி மயில்வாகனம்

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை அருமைத்துரை



கதிரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வீ.எம். றோட், பருத்தித்துறையை வசிப்பிடமாக வும் கொண்ட வேலுப்பிள்ளை அருமைத்துரை (24.02.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும், விஜயகுமார் (லண்டன்), மாலினிதேவி, வசந்தாதேவி (ஜேர்மனி), சந்திராதேவி, பாலகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நளினசுந்தரி (லண்டன்), பாலசுப்பிரமணிய ஐயர் (பூசகர்-செல்வச்சந்நிதி ஆலயம்), கமலராசா (ஜேர்மனி), சுதர்சினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், லக்ஷிகா (லண்டன்), விதுஷன் (லண்டன்), Dr. நிசாந்தி, பவித்திரா (கனடா), சரவணபவன், வேனுஜா, நிரோசா (ஜேர்மனி), நிதர்சன் (ஜேர்மனி), நிதர்சினி, சஜிக்கா (ஜேர்மனி), றஸ்மியா (ஜேர்மனி), நவநீதன் (லண்டன்), கஜேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2012) திங்கட் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீ.எம். றோட்,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

(15035) (6,7,10)

## தில்லையம்பலம் குணரட்ணம்



காரைநகர், தங்கோடையை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும், கொண்ட தில்லையம்பலம் குணரட்ணம் (24-02-2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் -மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான ஆறுமுகம் -காமாட்சி தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் பாசமிகு கணவரும், செந்தூரனனின் அன்புத் தந்தையும், சந்திரமதி, ஞானம்பாள், கமலாதேவி, சுந்தரம்பாள், கணேஷலிங்கம், ராஜராஜேஸ்வரி, தேவநாயகி, ராஜகுலசூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜலிங்கம், சிவபாலன், பரம்சோதி, காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் தயாபரிதேவி, பாலசுப்பிரமணியம், செல்வராஜா, புஷ்பகாந்தி, காலஞ்சென்ற Dr.செல்வரத்னம் மற்றும் செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2012) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் காலை 8 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''சூரன் வாசம்''
தங்கோடை,
காரைநகர்.

**தகவல்:**
**மனைவி,**
**மகன்.**

(15035) (6,7,10)

# Study in EUROPE

**Georgia, Belarus, Moldova, Kosovo, Armenia, Turkey, Azerbaijan**

- மேலே குறிப்பிட்டுள்ள ஐரோப்பிய நாடுகளுக்கான Student Visa 20 நாட்களில்.
- IELTS தேவையில்லை., குறைந்த பட்ச தகைமை O/L.
- O/L இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்
- மிக குறைந்த கட்டணங்களில் University/College களில் அனுமதிகள்.
- உணவு தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
- 3மாதங்களின் பின்னர் Itally, France, Germany, Shengen, Etc நாடுகளுக்கு செல்வதற்கான VISA ஒழுங்கு செய்து தரப்படும்.
- அனைத்து கட்டணங்களும் விசாவின் பின்னரே அறவிடப்படும்.

**Hot Line 075-741 9 741**

**UK. நாட்டுக்கான Student Visa**
University / Government College களில் Admission உடன் 20 மணித்தியாலங்கள் பகுதி நேர வேலைவாய்ப்புடன் விசாக்கள் பெற்றுத்தரப்படும்



FLEX Graphic

**BACKTON GLOBAL BUSINESS DIRECT.**
No-162B 1/1, Galle Road, Dehiwala. T.P.011-2719585.
E-mail-info@backtongbd.com web-www.backtongbd.com

## மாசி மகப் பெருந் திருவிழா

பருத்தித்துறை தம்பசிட்டி மகா மாரி பண்டாரி அம்மன் ஆலய வருடாந்த மாசி மகப்பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 7 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு இன்பருட்டி தீர்த்தக் கடற்கரையில் சமுத்திரத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

கோயில் குருக்கள் சிவஸ்ரீ சபா. பாஸ்கரக் குருக்களின் அனுசரணையுடன் கிரியக் கிரமஜோதி சிவஸ்ரீ அ.செல்வராசாக் குருக்கள் பிரதம குருவாக இருந்து பெருந் திருவிழாவை நடத்தி வைப்பார். (ம-8)

## அறிவித்தல்

சகல படகுகளிலும் நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் பயணத்தை மேற்கொள்ளும் சகலரும் கட்டாயமாக உயிர்காக்கும் அங்கியினை (Life Jacket) அணிந்தே படகில் செல்ல வேண்டும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பிரதேச செயலாளர், நெடுந்தீவு.**

## அறிவித்தல்

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான குமுதினி மற்றும் வடதாரகைப் படகுகளில் பயணங்களை மேற்கொள்வோர் தமது பயணப் பொதிகளை மட்டுமே தம்முடன் எடுத்துச் செல்லலாம். வியாபாரத்துக் கானசாக்குகள், பெட்டிகள், பொதிகள் மற்றும் தங்களது துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற ஏனைய பொருள்களைக் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**பிரதேச செயலாளர், நெடுந்தீவு.**

# கௌரவிப்பு விழா



வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளராகப் பதவியேற்றிருக்கும் நாரந்தனை மண்ணின் மைந்தனும் யா/நாரந்தனை கணேச வித்தியாலய பழைய மாணவனும் ஆகிய

**சிவலிங்கம் சத்தியசீலன் அவர்கள்**

இடம்:– யா/நாரந்தனை கணேச வித்தியாலய மண்டபம்.

காலம்:– (26.02.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11.00 மணி

தலைவர்
க.சகாதேவன் அவர்கள் - விழாக்குழு

பிரதம விருந்தினர்
திருமதி இமெல்டா சுகுமார் அவர்கள்
(யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்)

**விழாக்குழு, நாரந்தனை, ஊர்காவற்றுறை.**

கொழும்பில் இருந்து வருகை தரும் விரிவுரையாளரினால் நடாத்தப்படும்

IDM BIT Semester 1 இற்கான Computer Systems 1 மீட்டல் வகுப்பு

நேரம்:- மு.ப 8:00 - பி.ப 2:00

இடம்:- IDM, #216 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

பாடப் பரப்பு:- Computer Systems 1

Data representation (2s complement, IEEE, Floating point representation)

Flip Flops
CPU Organization and Instruction set
Storage
Past paper

கட்டணம்:- 700 /= தொலைபேசி:- 021 222 9901 / 0775 632 056

பதிவுகளை 04/Mar/2012 இற்கு முன்னதாக மேற்கொள்ளவும்

# VACANCIES IN JAFFNA
## யாழில் பதவி வெற்றிடங்கள்

தொலைத்தொடர்பாடல், இலத்திரனியல், குடிசார் (Telecommunication, Electrical & Civil) இயந்திரவியல் போன்ற நிர்மாணத் துறைகளில் 26 வருட அனுபவமும், சர்வதேச தர நிர்ணய நிறுவனத்தின், ISO 9001:2008 சான்றிதழும் பெற்ற எமது நிறுவனத்தில், **தொலைத் தொடர்பு வெளிக்கள உபகரண** [Telecom Out Side Plant (OSP)] யாழ்ப்பாண பிரிவில் பணியாற்றுவதற்கு செயலூக்கமுள்ள (Dynamic) சுய உந்தலுடன் தொழல்புரியக் கூடிய (Self Motivated) தகுதி வாய்ந்த ஆளணிகளுக்கு பின்வரும் பதவிநிலைகளில் வெற்றிடங்களுண்டு

**செயற்றிட்ட முகாமையாளர் (Project Manager)**
BSc Eng. அல்லது அதற்கு சமனான வேறு ஏதும் பிரிவில் பல்கலைக்கழக பட்டம் பெற்ற, 35 – 50 வயதெல்லையைக் கொண்ட, குறைந்தது 5 வருட உறுதிப்படுத்தப்பட்ட முகாமைத்துவ மட்ட (Managerial Level) துறைசார் அனுபவமும் கொண்ட, தலைமைத்துவப் பண்புகளுடன் கூடிய மிகச் சிறந்த தகுதிவாய்ந்தவர்கள்.

**தொழிநுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)**
மேற்பார்வை அனுபவத்துடன் கூடிய (Supervision Experience) தேசிய தொழிநுட்ப சான்றிதழ் [National Certificate in Technology (NCT)] அல்லது அதற்கு சமனான கல்வித் தகமையுடையவர்கள். தொலைத்தொடர்பு வெளியக உபகரண (OSP) முன்னனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். வயதெல்லை:- 25 – 50

**தொழிநுட்பவியலாளர் (Technician)**
க.பொ.த [G.C.E (O/L)] சாதாரண தரப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள். தொழில்சார் பயிற்சியளிக்கப்படும். மின்கம்பியிடல் (Electrical Wiring) துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

**தரவுப் பதிவு இயக்குநர் (Data Entry Operator)**
க.பொ.த உயர்தர [G.C.E (A/L)] பரீட்சையில் சித்தி பெற்ற, MS Office Packages இனை மிகச் சரளமாக கையாளக் கூடிய சிறந்த அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். தவறின்மையுடன் (Accuracy) தரவுகளை உள்ளீடு செய்யும் திறன் அவசியம்.

**பாரந்தூக்கியுடன் கூடிய கனரக வாகன, சாரதி (Driver for Boom Truck)**
பார ஊர்திகளை செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரத்தினை (Heavy Vehicle Driving Licence) அவசியம் கொண்டிருத்தல் வேண்டும். தேவையேற்படின் பாரம் தூக்கியை இயக்குவதற்கான பயிற்சி வழங்கப்படும்.

கவர்ச்சியான ஊதியங்கள் பேசித் தீர்மானிக்கப்படும். தகுதியானவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை (CV) இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 தினங்களுக்குள் கிடைக்கத்தக்கவாறு தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கவும்.

Group Manager (HRD & Admin)
Luminex (Private) Limited
#24, New Galle Road, Moratuwa
Fax: 011-2642999 E-Mail : luminex@slt.lk

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26.12.1966

மறைவு
26.02.2001

**திருமதி மகாலிங்கம் சித்திரா (கலா)**

இல்லத்தின் ஒளி விளக்கே!
பாசத்தின் உறைவிடமே அம்மா
அரவணைப்பை நீ விடுத்து
அவசரப்பட்டாயோ, ஒரு கணமேனும் சிந்தித்து
பார்த்தாயோ அம்மா!
சிரித்த உன் முகம் காண
ஏங்கி சிதைந்து போனோம் வாராயம்மா....!

டச்சு வீதி, கோப்பாய் தெற்கு. **கணவர், பிள்ளைகள்.**



## சந்நிதி முருகன் அன் ரவல்ஸ்

திருமண மற்றும் சுற்றுலாவிற்கான பஸ் சேவை
குளிரூட்டப்பட்ட திருமணக் கார்

Phone
021 222 8076
077 711 0199
077 201 8275



241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமை)



## Center Coordinator

for CINEC Campus in Jaffna and Trincomale

Colombo International Nautical & Engineering College (CINEC), a regional leader in higher education, is certified for ISO standards in Quality Environment, Health and Safety Standards and also the only educational institute in Sri Lanka to have received the National Quality Award on 3 consecutive 5 year periods.

Applicants should have a professional qualification from a recognized institute, along with a proven track record with at least 2 years experience in a similar position, related to education and customer services. The task would be to handle all education related projects and promotional work at the above branches.

The ideal person should be:

- A self-motivated entrepreneurial outlook, having a positive attitude and commitment to work in a responsible manner for the development of the Organization.
- Good communication skills in English and in Public Relations

Preference will be given to applicants who are fluent in all three languages (Tamil/English/Sinhala) and who are residing in or near Jaffna or Trincomalee.

Applicants need to post their CV to "CINEC HR Services", CINEC Campus, Millennium Drive, IT Park, Malabe or send their CV by email within 10 days of this advertisement.

The post applied to be indicated on the top left hand corner of the envelope.

CINEC
Maritime Campus
Millennium Drive,
IT Park, Malabe.

Tel: +94(011) 241 3500
Fax: +94(011) 241 3505
jobs@cinec.edu

World Class Excellence in Education and Training... www.cinec.edu



## மணப் பெண்கள் தேவை

சுண்டிக்குளியை வசிப்பிடமாகக் கொண்ட R.C. மதம் சேர்ந்த கொழும்பில் தொழில் செய்யும் 1981, M.B.B.S. டாக்டருக்கும் 1983 சிவில் பொறியியலாளருக்கும் டாக்டர், எஞ்சினியர் பெண்களை எதிர்பார்க்கின்றனர். இறுதி ஆண்டு மாணவிகளும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு : 0770780259

## சேவை

சகல வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு பிரஜா உரிமை (P.R) பெறுவதற்கு மிகவும் தெளிவான ஆலோசனை வழங்கப்படும்.

தொடர்பு : 0775 472468, 0770416010

## திருமண சேவை

சுலபமான சுயதெரிவு முறையில் மணமக்களைத் தெரிவு செய்வதற்குக் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் செவ்வாய், வியாழன் தவிர்ந்த மற்றைய நாள்களில் 11.00 - 1.00 மணிக்குள் விவரங்களை விசாரித்தறிக.

தொடர்பு : 0114873929

## சவாரி (Safari) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு

5800 km ஓடிய சவாரி (Safari) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. பதிவு, அனுமதிப் பத்திரம், காப்புறுதி உண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே.இல.
021 222 0797, 0719358057

## வீடு விற்பனைக்கு

யாழ். நகர் கொட்டடிச் சந்திக்கு மிக அருகில் (S.V.M. காஸ் விற்பனை நிலையத்துக்குப் பின்புறம்) 3 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 2279219

## வாகன சாரதி உடன் தேவை

வைற் ஹவுஸ் அந்திய கால சேவையில் வாகனத்தில் கடமைபுரிய சாரதி உடனடியாகத் தேவைப்படுகிறார். யாழ். மாநகர சபை எல்லைக்குள் (5K.m) உள்ளவர் விரும்பத்தக்கது. நேரில் வரவும்.

வைற் ஹவுஸ்
180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.


## கண்ணீர் அஞ்சலி



### கதிரித்தம்பி கண்ணதாசன்

அண்ணாவின் அன்புச் சகோதரனே
மூவைந்து ஆண்டுகள் இளையவனே
பார்தனில் எமை பரிதவிக்கவிட்டு - நீ
பரன் அடிசென்று விட்டாயோ!
பாசமிகு சகோதரனின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

(15066)(45.6.7)

க. காளிதாசப் புலவர்

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை தம்பு



சரவணை கிழக்கு பள்ளம்புலத்தை பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயிலடியை வதிவிடமாகவும் தற்பொழுது ஜேர்மனி முன்ஸ்ரர் நகரில் வசித்து வந்தவருமாகிய சின்னத்துரை தம்பு 23.02.2012 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலம் சென்றவர்களான செல்லையா, கந்தையா ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ் சென்றவர்களான பொன்னம்பலம் - கனகம்மா தம்பதியரின் மருமகனும் வரதராஜன் (ஜேர்மனி), வரதகஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோகரி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும் வருணன், வருணிகா, வருமிலா, அட்சயன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2012) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.


தகவல்.
செல்லையா ரஞ்சன்,
சாந்தி சிவபாலன் (பொறாமக்கள்)

(15036)(6-7-8)


PC PCMAG.COM EDITORS' CHOICE — 8 TIME WINNER

## வேகம் மற்றும் செயற்பாடு தன்மையைப் பாதிக்காமல் உங்களைப் பாதுகாத்திடுங்கள்.

Norton by Symantec




1/3 பாவனையாளர்களுக்கானது

**Norton 360 Version 5.0**
- 2GB வரை தகவல்களை இணையத்தில் சேமிக்க முடியும்.

**Norton Anti Virus 2012**
- உங்கள் கணனியை அதிகபட்ச பாதுகாப்பைப் பெறமுடியும்.

**Norton Internet Security 2012**
- அதிவேகமான இணைத்தில் தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்ள முடியும்.

நேரடி முகவருடன் தொடர்புக்கு
புத்திக - 0777 006 116

* Conditions Apply

PCH - கிளைகள்

| | | | |
|---|---|---|---|
| அம்பாறை | - 063 492 0942, 0773 187 528 | மட்டக்களப்பு | - 065 492 6811, 0777 589 025 |
| திருகோணமலை | - 026 492 4743, 0773 187 529 | மன்னார் | - 023 492 0614, 0773 747 641 |
| யாழ்பாணம் | - 021 492 0572, 0777 555 855 | நெல்லியடி | - 021 492 5156, 0772 069 042 |
| வவுனியா | - 024 458 9572, 0773 187 530 | கிளிநொச்சி | - 0772 068 989 |

VALUE ADDED PARTNERS

| | | |
|---|---|---|
| பிசினஸ் நெட்வேக் சொலுயூசன் | யாழ்பாணம் | - 0777563144 |
| ஸ்ரேஞ்சா கம்பியூட்டர்ஸ் | திருகோணமலை | - 0776167795 |

Authorised Distributor:
PCH Benchmark ICT
PC HOUSE PLC
# 451, Galle Road,
Colombo 03.
Telephone: 4 72 42 42
Fax: 4 72 43 43
E-mail: info@pch.lk
Website: www.pch.lk

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### அமரர் வல்லிபுரம் இராசையா

கடந்த (29.01.2012) ஞாயிற்றுக் கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய் வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை கீரி மலை புனித தீர்த்தக் கரையிலும் நாளை மறுதினம் (28.02.2012) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானவைரவர் கோபிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.

குடும்பத்தினர்

## யாழ்ப்பாணத்தில் பதவி வெற்றிடம்



- கணக்கு உதவியாளர்
- விற்பனை பிரதிநிதிகள் (ஆண்/பெண்)
- IT (தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்)

கணக்கு உதவியாளர், தகவல் தொழில்நுட்ப உத்தியோகத் தர்களுக்கு சிறந்த கணக்கியல் அறிவுடன், கணினி மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சியும் முக்கியமாகக் கருதப்படும்.



உங்கள் சுயவிபரக் கோவையை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

**anfccolombo@sltnet.lk.**

விளம்பரதாரர்
இல.46, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.

## சம்பந்தப்பட்ட சகலருக்கும்

## விசேட படகுச் சேவை

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் 2012.02.22 அன்று நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைவாக இவ் வருடம் இடம்பெறும் கச்சதீவு உற்சவத்தினை முன்னிட்டு பின்வரும் படகுச் சேவைகள் நெடுந்தீவில் இருந்து மேற்கொள்ளப்பட வுள்ளது.

2012.03.03
★ காலை 9.30 மணிக்கு நெடுந்தீவு பலநோ.கூ.சங்க படகு.
★ முற்பகல் 10.30 மணிக்கு நெடுந்தீவு அக்குவாட்டி படகு.
★ முற்பகல் 11.30 மணிக்கு நெடுந்தீவு கடற்றொழிலாளர் சங்க படகு.
★ பிற்பகல் 12.30 மணிக்கு நெடுந்தீவு சென்.அன்ரனிஸ் படகு.

2012.03.04
★ காலை 4.30 மணிக்கு நெடுந்தீவு பலநோ.கூ.சங்க படகு.

ஆ.சிறி, பிரதேச செயலர், நெடுந்தீவு.

(8/8317) (5-7-8)

## விற்பனைக்கு

கலர் மீன்கள், மீன்தொட்டிகள், குருவிகள், புதியவகைக் கூடுகள், நாய்க்குட்டிகள்,புதியஇனங்களில் பூக்கன்றுகள் மற்றும் பல இன கோழிக்குஞ்சுகள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனைக்கு உண்டு.

யாழ் அக்கூரியம்
941, K.K.S றோட், யாழ்ப்பாணம்

## மணமகள் தேவை

7 இல் செவ்வாய், 32 வயது 60½ பாவமுடைய ஆசிரியருக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 021 222 5255

## தென்னங்காணி விற்பனைக்கு

வரணி, இயற்றாளையில், பருத்தித்துறை வீதியிலிருந்து மேற்காக 150 மீற்றர் தூரத்தில் தென்னங்காணி உடன் விற் பனைக்குண்டு. (மாலை 5 மணி தொடக் கம் இரவு 9 மணிவரை தொடர்பு கொள்ள லாம் தொடர்பு - 0777222305

## காணி விற்பனைக்கு

நல்லூர், மருதடி ஒழுங்கையில்
36ஆம் இலக்க காணி
விற்பனைக்கு உண்டு
பகுதியாகவும் விற்கப்படும்.
தொ.பே. 077 564 1979

## கட்டட வேலைகள்

புதிய, பழைய கட்டடங்களுக்கு மாபிள் (Tilps) பொருத்துதல், பெயின் வேலைகள், இண்ட லொக் வேலைகள் (Supper Finishing Works) துரிதமாகவும், சாதாரண கட்டனத் திலும் செய்து தரப்படும்.

தொடர்பு : 072 3555955
071 7541244
072 4362001

## பதவி வெற்றிடம்

பிரபல தொலைத் தொடர்பு வலையமைப்பிற்கு
பின்வரும் வெற்றிடங்களுக்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. விற்பனை மேம்பாட்டு அதிகாரி
(மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரத்துடன்)
2. Free Lancer(நேரடி விற்பனையாளர்)

விண்ணப்பதாரிகள் 29.02.2012 ஆம் திகதிக்கு முன் தங்கள் சுய விவரக் கோவையுடன் 9-12 மணிக்குமிடையில் நேரடியாக சமுகமளிக்கு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Etisalat
R & R Telecom Jaffna (pvt) Ltd,
127,K.K.S. Road, Jaffna (14994)(45-6-7)

## கார், வான் வாடகைக்கு

திருமண சேவை, நாள் வாடகை, மாத வாடகை, வருட வாடகை மற்றும் வேறு மங்கள நிகழ்வு களுக்கும் புதிய மொடல் கார்கள் வாடகைக்கு விடப்படும்.

Toyota Allion 260 car
Toyota axio car

தொடர்புகளுக்கு:
E. சுபேந்திரன்
T.P: 0777847576,
0779092932, 0212224955.

(14936) (6,7,10)

## விநியோகஸ்தர்கள் தேவை

### எமது நிறுவனம்

குடிநீர்/ பழரச பானங்கள்/அயடீன் கலந்த உப்பு சரக்குச் சாமான்கள் உற்பத்தி செய்து சந்தைப் படுத்துகின்றது.

இது ஒரு ISO/SLS/HACCP மற்றும் சுகாதார அமைச்சின் அத் தாட்சி பெற்ற உற்பத்தியில் முன்னணியில் உள்ள நிறுவனமாகும்.

எமது விற்பனை வலயத்தை நாடு பூராவும் வியாபிக்க இருப்பதால், வடக்கு கிழக்கு பிரதேசங்களிலிருந்து நீங்களும் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

### உங்களிடமிருந்து நாம் எதிர்பார்ப்பது

★ வங்கி உத்தரவாதம் அல்லது பணவைப்பொன்றை வைக்கும் ஆற்றல்.
★ சொந்த வாகனமொன்று – களஞ்சிய வசதிகள்.
★ பிரதேசம் குறித்து நன்கு தெரிந்திருத்தல்.

அதி உச்ச பலாபலன்கள் மற்றும் சிறப்பான கொடுப்பனவுகள் ஏராளம்

மேலதிக விபரங்களுக்கு இன்றே அழையுங்கள்

**விற்பனை முகாமையாளர்**
**தொ.பே. 0776672559 / 0772365392**

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, சாவகச்சேரி, நல்லூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு பின்வருவோர் உடன் தேவைப்படுகின்றனர்.

1. English Teachers / Trainee English Teachers
2. Computer Instructors
3. Field Officers
4. Marketing Officers
5. Beauty Theropy Instructors
6. Receptionst
7. Secretary (அலுவலக செயலாளர்)

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு 077 8925895 தொடர்பு கொள்ளவும்.

Knowledge International Pool,
788 C, Point Pedro Road,
முத்திரைச் சந்தி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
Head office - 46, 6th Lane, Colombo - 13.

(15012)(6-7-8)

## Metro Travels

### விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 13500 |
| Colombo-Tiruchirapally-Colombo | 14500 |
| Colombo-Doha | 22000 |
| Colombo-London | 36000 |
| Colombo-Toronto | 80000 |
| Colombo-Singapore-Colombo | 31000 |
| Colombo-kualalumpur | 34000 |
| Colombo-Frankfurt | 40000 |
| Colombo-Milan | 38500 |
| Colombo-Rome | 40500 |
| Colombo-Paris | 38000 |
| Colombo-Zurich | 36000 |



All Taxes included, credit card Accepted with a surcharge & Travel insurance,
Above Fares Are Subject to seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு

METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch office) No-62/33, Stanley Link Road, Jaffna.
Tel:-215673555,0212224647,0212220404,0215673666.
Office Hourse: Weekdays from 8.30 am to 5.00 pm
Saturday from 9.00 am to 1.30 pm
New Branch office: No-34, New Bus Stand Complex, Vavuniya.
Tel:0242226800 / 0242226801.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் நவரத்தினம் பரமநாதன் (J.P)

(உரிமையாளர்: நிறைஞ்சனாஸ் தியேட்டர், நிறைஞ்சனாஸ் ஹாட்வெயர்ஸ், சங்கானை, முன்னாள் உரிமையாளர் நாதன்ஸ் சினிமா, யாழ்ப்பாணம்.

மலர்வு 27★07★1952 — உதிர்வு 27★01★2012

கடந்த (27.01.2012)அன்று இறையடி சேர்ந்த எமது குடும்ப விளக்கு அமரர் நவரத்தினம் பரமநாதன் அவர்களின் மரணச் செய்திகேட்டு ஓடிவந்த அன்பு நெஞ்சங்களுக்கும் மலர் வளையம் மூலமும் கண்ணீர் அஞ்சலி மூலமும் அஞ்சலி செலுத்திய அன்பர்களுக்கும் சுகவீன முற்றிருந்த வேளை உதவிய யாழ். போதனா வைத்தியசாலை (7ஆம் விடுதி) மற்றும் சென்றல் நேசிங் ஹோம் திருநெல்வேலி வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக் கும் மனம் நெகிழந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிறைஞ்சனாஸ் தியேட்டரடி
200, பொன்னாலை வீதி,
சங்கானை.
தொ.பே. 077 6484173

மனைவி (பிரபாலினி)
பரமநாதன் குடும்பத்தினர்

## யாழ் நகரில்! வாடகைக்கு கார்கள், வான்கள்

Rent a Car



- சாரதியுடன் வாகனம்
- சாரதியில்லாமல் வாகனம்
- திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
- வெளியூர் பயணங்களுக்கு
- கார், வான், கனரக வாகனங்கள்
- வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

105/06, சி.பொன்னம்பலம் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632, 0750422904
Office : 021320 2198

SOS CHILDREN'S VILLAGES SRI LANKA

## பதவி நிலைவெற்றிடம்

சர்வதேச SOS சிறுவர் கிராமத்தின்
அனுசரணையுடன்
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் SOS சிறுவர்
கிராமத்திற்கு
பின்வரும் பதவிநிலைகளுக்குவெற்றிடங்கள்
கோரப்படுகின்றன.

1). கல்வியியலாளர்-
Educator(பெண்-வதிவிடஉத்தியோகத்தர்)
2). மருத்துவத்தாதி -
Medical staff (பெண்)
3). பராமரிப்பு உத்தியோகத்தர்-
Maintainance officer
(ஆண்- வதிவிட உத்தியோகத்தர்)

தகுதியுடையோர் 29.02.2012க்கு முன்
தங்களுடைய
விண்ணப்பங்களை மின்னஞ்சல் மூலமாகவோதபால்
மூலமாகவோஅனுப்பிவைக்குமாறு
வேண்டப்படுகிறீர்கள்.

அருச்சுணன் சுவாமிநாதன்
உதவிப் பணிப்பாளர்
எஸ்.ஓ.எஸ் சிறுவர் கிராமம்
இல: 276,கனகரட்ணம் வீதி
நல்லூர்.
தொலைபேசி இல: 0772366106
மின்னஞ்சல்:
arjunan.swaminathan@soscvsrilanka.org
(15053) 2-6

## மணமகள் தேவை

33 வயது நிரம்பிய வளர்ப்பு மகளுக்கு கிறிஸ்தவ மணமகன் தேவை.
தொடர்பு : 021 3210804

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி கற்குழி 1ஆம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776913342

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும்
சுத்தம் செய்து குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.
(13923) (45-6-7)

## வேலை ஆள்கள் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி முன்பாக இயங்கும் தேநீர்ச்சாலைக்கு

★. டீ மேக்கர்
★. சப்பிளையர்
★. றொட்டி மேக்கர்
★. சமையலாளர் (உடன்தேவை)

தொடர்பு : தனுஷ் கபே,
66, மணிக்கூட்டுக் கோபுர வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம்.

## காணியும் வீடும் விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் 8 பரப்பு
காணியும்,
வீடும் விற்பனைக்குண்டு.
பகுதி பகுதியாகவும் கொடுக்கப்படும். அத்துடன் பயன் தரும் மரங்கள்
உள்ள பெறுமதியான காணி.
தொடர்பு: 075 5784335
(14996)(45-6-7)

## வீடு காணி விற்பனைக்கு

பரந்தன், குமரபுரத்தில் ஏ-9 வீதிக்கு அண்மையில் வீடு மற்றும் கிணற்றுடன் கூடிய ½ ஏக்கர் மேட்டுக் காணியும், மூன்றரை ஏக்கர் வயற்காணியும் விற்பனைக்குண்டு தொடர்புகளுக்கு:- 0214912798

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி சந்திரரூபதிகணபதிப்பிள்ளை

எனது துணைவியார் நோயுற்ற வேளையில் அவருக்குச் சிகிச்சையளித்துதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் கள், வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் சென்ஜோன்ஸ் சேவையாளர்கள் மற்றும் உள்ளூர் வைத்தியர்கள் யாவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது இல்லத்தரசி சிவபதம் அடைந்ததைக் கேள்வியுற்று துயரில் பங்குகொண்டு ஆறுதலளித்து உதவிய உறவினர்கள், நண்பர்கள், கலைஞர்கள் மற்றும் வெளிநாட்டு உறவினர்களுக்கும் நன்றிகள் பல கண்ணீர் அஞ்சலி மூலம் துயர்பகிர்ந்த வட இலங்கை சங்கச் சபையினர், இளங்கலைஞர் மன்றம் மற்றும் பொன்னாலை சித்திவிநாயகர் பஜனை சபையினர் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்ப தோடு நாளை (27.02.2012) திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தபாற்கந்தோர் முன்பாக, சங்கீத பூசணம்
சுழிபுரம், (15014) (45-6-7) சு. கணபதிப்பிள்ளை

# SRI LANKA'S NUMBER ONE BRAND IS COUNTING ON YOU

With a state-of-the-art service centre and a team of skilled service franchise agents, Singer Sri Lanka gives Jaffna residents the premium service they deserve at a conveniently close location.

### Trainee Customer Service Assistants

- Passed GCE A/L & GCE O/L examinations
- Age between 19 and 25 years
- Fluent in Tamil
- Knowledge of written and spoken English preferred

### Electrical Technicians – Refrigerators/Washing Machines

- Passed GCE O/L examination
- Diploma in Refrigeration & Air Conditioning or a Skill Craftsmanship Certificate from NAITA or from an equivalent institution
- Computer literacy
- Minimum of 3 years' experience in repairing refrigerators, washing machines and other home appliances

### Trainee Electrical & Electronic Technicians

- Passed GCE O/L examination
- Part qualification in electronic / electrical field
- A Skill Craftsmanship Certificate from NAITA or from an equivalent institution
- Computer literacy

An attractive remuneration package awaits the right candidates.

If you feel you have what we need, then forward your CV, together with the contact details of two non-related referees, to the address below to reach us within 7 days of the date of this advertisement. Please indicate the post applied for on the top left corner of the envelope. You are also invited to apply via our website at **www.singersl.com**

**Manager – Human Resources**
**Singer (Sri Lanka) PLC,**
**80, Nawam Mawatha,**
**Colombo 2.**

SINGER
Trusted Excellence

As the country's strongest brand, Singer resonates in the hearts and minds of millions of Sri Lankans. Singer is by far the number one retailer of consumer durables in Sri Lanka with a portfolio of over 30 global brands, including multi-billion dollar brands such as Samsung, Hitachi, Philips, Whirlpool and Kenwood etc. Our tradition of trusted excellence is an ongoing saga since the invention of the very first sewing machine in 1851. Singer is the global market leader, with an unmatched record of 160 years.

Are you the next generation of Singer?

## வீடு வாடகைக்கு

சுண்டுக்குளி 37 சோமசுந்தரம் அவனியூவில் 5அறைகளையும், 4 குளியல் அறைகளையும் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.
N.G.O மற்றும் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 0757088396 அல்லது 0755009648.
வாகனங்கள் நிறுத்துவதற்கும் இடவசதியுண்டு.

## வீடு விற்பனைக்கு

பல வாகனங்கள் தரிக்கக்கூடிய வளவுடன், நவீன வசதிகொண்ட விசாலமான வீடு அரியாலை நெடுங்குளம் வீதியில் உடன் விற்பனைக்கு உண்டு.

இந்த வீடு A 9 வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் 5 ½ பரப்புக் காணியில் இருக்கிறது. இன்னொரு வீதியில் இருந்தும் இதற்கு வழியுண்டு. ஒரு பொது சேவைகள் அல்லது வியாபார சேவைகள் காரியாலயத்திற்கோ அல்லது உயர் அதிகாரிகள் வசிப்பதற்கோ உகந்தது.

இலங்கைத் தொடர்பு:
077 6909284 அல்லது 2584797
வெளிநாடுத் தொடர்பு:
94 77 6909284 அல்லது 94 11 2584797
(15001)

## வேலை ஆள் தேவை

கணினி அறிவு உள்ள கணக்கு
வேலை தெரிந்த பெண் பிள்ளைகள்
தேவை. முன்னனுபவம் உள்ளவர்கள்
விரும்பத்தக்கது.
சுய விவரக் கோவை மற்றும்
ஆவணத்துடன் நேரில் வரவும்.
மயூரா டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல . 25, நவீன சந்தை, மேல்மாடி
யாழ்ப்பாணம்.

## தேவை

கொழும்பு, வெள்ளவத்தையை நீண்ட காலமாக வசிப்பிடமாகக் கொண்ட ஒரு தமிழ் குடும்பத்துக்கு வீட்டு வேலை செய்ய (ஓரளவு சமைக்கத் தெரிந்த) தொடர்ச்சியாக தங்கியிருந்து வேலை செய்ய ஒரு பெண் பிள்ளை தேவை. நமது குடும்ப அங்கத்தவர் போல் அன்பாக கவனிக்கப் படுவர். யாரும் உதவியற்ற பிள்ளைக்கு முன்னுரிமை வயதெல்லை 45. சம்பளம் 8000/=
தொடர்பு: 071 5350914
(14941)(45-6-7)

## Personal and group classes Mathematics

London A/L, O/L, Local (இணைந்த கணிதம்) 2012, 2013 English Medium வகுப்புக்கள் கண்டி, கொழும்பு ஆசிரிய குழுவினால் ஆரம்பம்.
துரித மீட்டல் இடம் பெறும் 2012 Batch மாணவர்களுக்கு பாடப்பரப்புகள் பரீட்சைக்கு முன்னர் Cover பண்ணுவதாக உத்தேசித்துள்ளோம்.

தொடர்புகளுக்கு : M.T. Sathya B.Sc (Jaffna), M.Sc (pera),
077 7469502 (14997)(6-7-8)

# மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய புதிய கட்டடத் தொகுதித் திறப்பு விழா சிறப்புமலர்



## சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலைய வரலாறு

இன்று கம்பீரமாக அழகான முகப்புடன் விளங்கும் இந்நிலையம் புலவர்கள் பலர் வாழ்ந்து புலமையில் திளைத்த புலோலியம் பதியின் மேற்கே தம்பசிட்டியில் வந்துதித்த தமிழறிஞர் செந்தமிழ்ச் செம்மல் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் திருநாமம் பூண்டிருப்பது நாமனைவரும் பெற்ற பெரும் பேறேயாகும். ஆம் ஈழத்தில் மேலைப் புலோலி தம்பசிட்டியில் பிறந்து இந்தியாவில் தமிழகம் சென்றுதன் புலமையால் தமிழக அறிஞர்களாலேயே வியந்து விதந்துரைக்க வைத்த சதாவதானி அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிற்கும், சைவம் தழைத்தோங்கவும் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை.

சமய நூல்கள், கண்டன நூல்கள், உரை நூல்கள், பதிப்புரை நூல்கள் என ஏறத்தாழ முப்பது நூல்களை எழுதியும், மிகப்பெரிய ஒரு மொழியகராதி யாப தமிழ் அகராதியைத் தொகுத்தும் சமயப் பிரசங்கங்கள் நிகழத்தி யும், தமிழ், சமயப் பணிகள் ஆற்றியவர். அருட்பாமருட்பா மோதலில் நீதிமன்றம்வரை சென்று தன் வாதத் திறமையால் வென்று ''மாயாவாத தும்சகோளரி'' எனப் பெயர் பெற்றவர், பெரும் நாவலர் இத்தகைய திறமைகளைப் பெற்ற பேரறிஞர் சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் நாமத்தைச் சூடி இச் சனசமூக நிலையம் தன் செயற்பாடுகளை அவரின் தமிழ், சைவப் பணிகளைப் பேணும் வகையில், அறநெறிப் பாடசாலையினை அமைத்து சமயத்தையும், பாலர் பாடசாலை அமைத்து தமிழையும் வருடா வருடம் அவரை நினைவு கூர்ந்து குருபூசை தினம் மற்றும் பேச்சு, மனனம், கட்டுரை, அவதானம், சதுரங்கம், பொது அறிவுப் போட்டிகளை நடத்தி இளஞ்சமுதாயத்தின் தமிழ் அறிவு, தமிழ்ப்பற்றை விதைத்து, வளர்த்து வருவது யாவரும் அறிந்ததே. இத்தகைய போட்டிகள் ஆரம்பத்தில் கிராம மட்டத்திலும் பின்பு அயற்கிராமங்களை இணைத்தும் இறுதியில் வடமாராட்சி முழுவதும் மாணவர்கள் பங்குபற்றுவதை கடந்த பல தசாப்த காலமாகக் காணமுடியும்.

இந்த நிலையம் ஆரம்பத்திலர் ஓர் ஓலைக் குடிசையில் வாசிப்போர் கூடமாக, இரவுப் பள்ளியாக திரு ஆழ்வாப்பிள்ளை கந்தையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு பின்பு ஒரு சுண்ணாம்புக் கட்டடமாகக் கட்டப்பட்டது. பின்பு புதிய கட்டடத்திற்கான அடிக்கல் 18.01.1984 இல் நாட்டப்பட்டு இரண்டு அறைகள் கட்டப்பட்டது. இன்று காலத்திற்கேற்ப அழகிய முகப்புத் தோற்றத்துடன் மிகப்பெரிய மண்டபத்தையும் அமைத்து பெரிய நிலையமாக மாறி நிற்கிறது. இதனை அமைப்பதில் கடந்த இரண்டு வருடங்களாக இயங்கிக்கொண்டிருக்கும் நிர்வாகம், தலைவர் கி.குகநாதன் அவர்கள் தலைமையில் திட்டமிட்டது. அதன்படி கிராம இளைஞர்களின் உடலுழைப்பால் பழைய கட்டடம் உடைக்கப்பட்டு கட்டட ஆரம்ப முன்னோடி வேலைத்திட்டம் பருத்தித்துறை நகர சபையின் மூன்று இலட்ச ரூபா ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ. கஜேந்திரன் அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு ஒரு இலட்சம், திருமதி இந்திரா வீரபாகு அவர்களின் இரண்டரை இலட்சம் ரூபா என கிராம மக்கள், புலம் பெயர்ந்து வாழும் கிரா மத்தவர்கள், நிலைய அபிமானிகள் என பலரும் நிதியுதவி, பொருளுதவி செய்தமையால் இன்று உங்கள் முன் அழகுற நிமிர்ந்து நிற்பதைக் காணலாம்.

05.01.1975 இல் சதாவதானி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.

08.12.1985 இல் சதாவதானி சிக்கன கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.

04.02.2005 இல் சதாவதானி அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.

இவ்வாறு எமது சனசமூக நிலையம் பல்வேறு பணிகளைச் சமூகத்திற்கு ஆற்றி வருவதுடன் வருடா வருடம் சதாவதானி அவர்களின் நினைவுதி னத்தை, போட்டிகளை நடத்தி மாணவர்களை ஊக்குவித்தும், பட்டிமன்றம், கவியரங்கம் நடத்தியும் பல பெரியவர்கள், அறிஞர்களை, கலைஞர்களை அழைத்து அறிவுரை கூறவைத்தும், அவர்களைத் கௌரவித்தும் பெரும் பணி ஆற்றிவருகிறது. இது இவ்வருடம் 64ஆவது அகவையில் நிலையம் இயங்கிக் கொண்டிருக்க 105 ஆவது குருபூசை தினத்தை கொண்டாட உள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையத்தின் புகழ் யாழ் குடா நாட்டையும் தாண்டி ஈழத்தில் பல மாகாணங்கள் ஏன் உலகெங்கும் பரவி உள்ளமை எமது கிராமத்துக்குப் பெருமை சேர்க்கும் நற்செய்தியாகும்.

இந்த நிலையில் இந்நிலையத்தின் ஆரம்பகர்த்தாக்களும், முன்னைய காலங்களில் நிலையத்தை வழி நடத்தியவர்களையும் நினைவு கூர்ந்து அவர்களை நன்றியுடன் சிரம்தாழ்த்தி நிற்கின்றது.

### வாழ்த்துச் செய்தி



''செந்தமிழ் அணங்கின் சிந்தை என்னும் தங்கும் தமிழொயித் துங்கலன்'' எனப் போற்றப்படுகின்ற சதாவதானி கதிரைவேற்பிள்ளை பெருமகனாரின் திருநாமத்தினைக் கொண்டு இயங்குகின்ற மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தினரின் நீண்ட நாள் தேவையாகும். பெரு விருப்பாகவும் கருதப்படுகின்ற ''புதிய மண்டபம்'' சிறந்த முறையில் அமைக்கப்பட்டு, திறப்பு விழா நடைபெறும் இந் நன்னாளில் வாழ்த்துக் கூறுவதில் அக மிக மகிழ்கின்றோம். 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நிலைய உறுப்பினர்கள், நலன் விரும்பிகள்,கிராமமக்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் எல்லோரினதும் பல்வேறு வகையான பங்களிப்புகளுடன் இலங்கையின் வடபகுதியில் தனக்கெனத் தனியிடத்தினை வகித்து வரும் இச் சனசமூக நிலையமானது, தனது 64 ஆவது அகவையில் புதிய மண்டபத்தினை அமைத்துக் கொள்வது தொடர்பாக, இந்நிலையத்தினை ஆரம்பித்து, கட்டிக் காத்து, வளர்த்து, செயற்பாடுகளை முன்னெடுத்த, அனைவரையும் உளக் களிப்புடன் நினைவு கூருவதுடன் மற்றும் நிகழ்கால செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுத் துச் செல்கின்ற அனைவரையும் வாழ்த்துவதில் மனமார மகிழ்கின்றோம்.

இச் சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் மேன்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவ னைப் பிரார்த்திப்போமாக.

-அம்பலவாணர் துரைசிங்கம்,
முன்னாள் பொருளாளர், செயலாளர், தலைவர், காப்பாளர்.

### மேலைப் புலோலி சதாவதானி கதிரை வேற்பிள்ளை சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழாவின் போது சித்தாந்த சைவப்புலவர், ம.ச. வேதாரணியக் குருக்களால் வழங்கப்பட்ட ஆசியுரை.



இந் நிலையமானது முதன் முதல் ஆழ்வார்ப்பிள்ளை கந்தையா அவர்களால் வாசிப்போர் கூடமென ஓலைக் குடிசையில் ஆரம்பிக்கப்பட்டு இரவு நேரத்தில் நடை பெற்றுப் பின்னர் கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையமாக மாற்றமடைந்து விளங்கிற்று.

1975 இல் பாலர் பாடசாலையும் 1985 இல் சிக்கன கூட்டுறவுச்சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது. சதாவதானியின் குருபூசைத்தினம் வருடா வருடம் பங்குனி மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அக்குருபூசைத்தினங்களில் வடமராட்சி மாணவர்களிடையே பலதரப்பட்ட கலை நிகழ்வுப்போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்கித் தமிழ் வளர்ச்சிக்கு நிலையம் பெருஞ் சேவையாற்றி வருகின்றது.

இவ்வாறாக வளர்ச்சி பெற்று வருகின்ற நிலையத்தின் 64 ஆவது ஆண்டாகிய இவ்வாண்டு புதிய கட்டடம் பூர்த்தி செய்யப்பட்டு 26.02.2012 திறப்பு விழா நிகழ விருப்பதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இந் நிலையம் இனிமேலும், மேன்மேலும் வளர்ச்சி பெற்று சிறந்த சேவையாற்ற வேண்டும் என மாலோன் தளி மகாலிங்கப் பெருமானின் பாதம் பணிந்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

வாழிய சைவம், வாழிய செந்தமிழ்
வாழிய சனசமூக நிலையம் வாழிய வாழியவே

### வாழ்த்துச் செய்தி



மேலைப் புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் கட்டடத் திறப்பு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இந் நிலையம் மிக நீண்ட காலமாக இயங்கி சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களை நினைவுகூர்ந்து வருவதுடன் இன்னோரன்ன சமூக கலைப்பணிகளையும் முன்னெடுத்து வருவதனை அறிந்து உவகையுற்றேன். சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்கள் இம்மண்ணுக்கு கிடைத்த பெரும் பொக்கிஷம் அவரை அவரின் பணிகளை எமது இன்றைய தலைமுறைக்கு எடுத்தியம்பும் வரலாற்றுக் கடமையை செய்துவருவதுடன் பிரதேச கலை, கலாசார சமூக மேம்பாட்டுக்காக அயராது இடைவிடாது உழைத்துவரும் சனசமூக நிலையம் ஆல்போல் தழைத்து மேலும் வளர்ந்துயர வாழ்த்திப் பணிக்கிறேன்.

இ.த. ஜெயசீலன்,
பிரதேச செயலாளர்,வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

### ''சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்'' ஒரு வரலாற்று மையம்



மேலைப் புலோலி ''சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்'', வடமராட்சிப் பகுதியில் மக்கள் சேவையில் தனக்கெனத் தனியான ஓர் இடத்தைப் பிடித்து நூற்றாண்டை நோக்கி வீறு நடைபோட்டு வருகின்றது. தமிழ் வளர்த்த பெரியாரின் பெயரைத் தாங்கிய இந்த நிலையம், பெரியார் கதிரைவேற்பிள்ளையின் புகழ் பரப்புவதிலும், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும், மக்களிடையே மறுமலர்ச்சியை விதைப்பதிலும் என்றுமே தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

வாசிப்போர் கூடம், இரவுப்பள்ளி என்ற ஆரம்ப அமைப்பு சனசமூக நிலையமாக மாற்றமடைந்து, கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்'' என்ற பெயரைத் தாங்கி, பாலர் பாடசாலை, சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் என்று பல விரிவுகளாகக் கிளை பரப்பி சேவையின் சின்னமாக இன்று காட்சியளிக்கின்றது. சதாவதானி கதிரைவேற்பிள்ளை குருபூசைத் தினத்தை முன்னிட்டு வருடாவருடம் மாணவர்கள் மத்தியில் பல வகையான அறிவு சார் போட்டிகளை நடத்தி விழிப்புணர்வைத் தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது.

சமய, சமூக, கல்வி, கலை, பண்பாடு என்று பல துறைகளிலும் கால் பதித்து அரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் ''சதாவதானி கதிரவேற்பிள்ளை சன சமூக நிலையம்'' மேன் மேலும் வளர்ந்து, ஏனைய பொது நிறுவனங்களுக்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சபா ரவீந்திரன் J.P.U.M (தலைவர், நகரசபை, பருத்தித்துறை)

### வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் தனது 64 ஆவது நிறைவில் புதிய கட்டடத் திறப்பு விழாவினைக் கொண்டாடுவதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமகிழ்வடை கின்றோம். ஒரு சமூகத்தின் உயிர் நாடியாக விளங்குவது சிறப்பாக இயங்கும் ஒரு சனசமூக நிலையமென்றால் அது மிகையல்ல. நாளாந்த பத்திரிகைகளையும் வாராந்த, மாதாந்த சஞ்சி கைகளையும் அறிவை வளர்க்கும் அரும்பெரும் புத்தகங்களையும் கொண்டிருப்பது மட்டுமல்ல சமூகத்தின் வளர்ச்சிக்கும் சனசமூக நிலையங்கள் உதவி வருகின்றன. இந்தவகையில் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் ஆரம்ப காலத்திலிருந்தே மாணவர்களையும் சமூகத்தையும் நல்வழிப்படுத்தும் சிறப்பான பல செயற்பாடுகளைத் தொடர்ச்சியாகச் செய்து வருகின்றது. நான் மாணவனாக இருக்கும் காலத்தில் வாரம் ஒரு முறையேனும் இச் சனசமூக நிலையத்தைத் தரிசிக்காமல் சென்றதில்லை என்ற பெருமை இன்னும் எனக்குண்டு. அழகான அமைதியான சூழலில் புதிய கட்டடத்துடன் சிறந்த நிர்வாகத்தினரின் முகாமைத்துவத்தினால் இச் சமூகம் மேலும் உயர்வடைய மனமார வாழ்த்தி அமைகின்றேன்.

- இரா.வரதீஸ்வரன், (பிரதேச செயலாளர்)

### கலாசார பேணுகைக்கு உள்ளம் சார் வாழ்த்துக்கள்



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்துள், தன் பணியினை பொலிவுடன் ஆரம்பிக்கின்ற மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை நிலையத்துக்கு நான் எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்,

''அறிவு என்னும் கணபதியை அகத்துள் கொண்டு வாழும்'' இந்தச் சனசமூக நிலையத்துக்கு உட்பட்ட மக்கள் சமூக அபிவிருத்தி என்று பார்க்கும் போது திட்டமிட்டு உருவாக்கப்பட்ட எல்லா வகையான சமுதாய மேம்பாடுக ளையும் உள்ளடக்கும். இந்த அபிவிருத்தியில் முன்னேற்றத்தைக் கொண்டுவர குடிசார் தலைவர்கள், குடிமக்கள், வாண்மையாளர்கள், தொழில்சார் புலமை கொண்டவர்கள் ஒன்றிணைந்து கல்விசார் ஒழுக்க முறையுடன் தரமான பயிற்சி முறைகளையும் உருவாக்குதலைக் குறிக்கும், இதனை சமுதாய உருவாக்கல் எனவும் அழைப்பர், ஒவ்வொரு வருக்காக பலரும், பலருக்காக ஒவ்வொருவரும்'' என்ற உன்னத, இலட்சியத்தின் தாரக மந்திரமாக வரித்துத் தமக்கும் பிறருக்கும் பயனுள்ள வகையில் வாழ்வாங்கு வாழுகின்ற ஒரு மக்கள் சமுதாயத்தை உருவாக்கம் செய்யும் ஒரு சீரிய பணியில் கடந்த 64 ஆண்டுகளாக நற்பணி புரிந்து வருகின்றது. இந்த வருடம் சதாவதானி அவர்களின் 105 ஆவது நினைவு தினம் ஆகும். சனசமூகத்தின் செயற்பாடுகள் கடந்த காலத்து வரலாற்றையும், நிகழ்காலத்து சிறப்புக்களையும் தொகுத்து எதிர்கால அத்தியாயங்களுக்கு நிகரில்லா வரலாற்றுத் தளங்களாக விளங்க வேண்டும் என வாழ்த்துவதுடன் '' நல்லோர் சிந்தனையில் நலம் மிகத்தோன்றிய நல் எண்ணங்கள் எல்லோரும், களிக்க இனிது நிறைவெய்தும்'' என்பதற்கு இந்த நிலையத்தின் செயற்பாடுகளும் பணிகளும் உதாரணமாக மலரட்டும். இந்த வகையில் சனசமூக நிலையத்தின் 1984 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்ட இந்தப் புதிய கட்டடம் இன்று முழுமையாக நிறைவேறி புதுப்பொலிவுடன் தங்களின் சேவைகள் அர்ப்பணிப்புடன் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் (யாழ். பல்கலைக்கழகம்)

### புதிய கட்டடத்தில் குடிபுகும் கலைக்கோயிலே வாழி



மேலைப் புலோலியின் பெரும்புகழ் சதாவதானி கதிரைவேற்பிள்ளை என்னும் பெருமகனாரின் திருநாமம் பூண்டு அவர் ஆற்றிய தமிழ்ச் சைவப் பணிகளை இன்று சமூகத்துக்குச் செய்து வரும் எமது சனசமூக நிலையம் தனது 64 ஆவது அகவையில் புதுப்பொலிவு பெற்று மிகப் பெரிய முகப்புடன் கூடிய அழகான கட்டடத்தில் இன்று குடிபுகுந்து இன்னும் நிமிர்ந்து நின்று மேலும் உத்வேகத்துடனும், புதுமெருகுடனும் தன் பணிகளை ஆற்ற இறைவன் சித்தம் கிடைத்தமை எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

தம்பசிட்டிக் கிராம மக்களின் வாழ்வியலின் மையமாக இந் நிலையம் திகழ்கின்றது. இதன் கிளைகளாக சதாவதானி சிக்கனக்கூட்டுறவுச் சங்கம், சதாவதானி முன்பள்ளி, சத்ாவதானி அறநெறிப் படசாலை என்பன அமைந்து கிராமங்களுக்குப் பலவகையான பணிகளை ஆற்றி வருகின்றமை யாவரும் அறிந்ததே. இன்று மிகப் பெரும் செலவில் தனக்கென அழகான, பெரிய இருப்பிடத்தை அமைத்து அழகு பார்க்க இக் கிராம மக்கள், புலம்பெயர்ந்து புலங்களில் வாழும் நிலைய உறுப்பினர்கள், அபிமானிகள், பருத்தித்துறை நகரசபை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் உதவியிருக்கிறார்கள். அவர்களின் நிதி மற்றும் பொருள் உதவியுடன் எமது கிராம இளைஞர்கள் தமது மிகப் பெரும் உடல் உழைப்பை நல்கி நிலையத்துக்கு உருக்கொடுத்தமை எமது உள்ளத்தைத் தொடும் செய்தியாகும். இன்றைய இளைஞர்கள் சமூகச் சீர்கேட்டை நோக்கி நகர்வதாகப் பலரும் வேதனையுறும் இக் காலகட்டத்தில் எம் மூர் இளைஞர்கள் சமூகசேவையில் முன்மாதிரியாகத் திகழ்வது இந்நிலையம் சமூகத்திற்கு ஆற்றிய சிறப்பான பணியின் ஓர் உயர்பண்புக் குறியீடாக அமைகிறது. இத்தகைய வரலாற்று நிகழ்வுக்குத் தலைமை தாங்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது இறைவன் சித்தமே.

எனவே எமது சனசமூக நிலையம் புதிய கட்டடத்தில் தன் பணிகளைப் புதுமெருகுடன் ஆரம்பித்து இச் சமூகத்துக்கு முன்புபோல் செய்த பணிகளுடன் காலத்தின் தேவையறிந்து அரிய பணிகளையும் செய்வதோடு சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் புகழையும் பரப்ப வேண்டும். அவர் ஆற்றிய பணிகளைத் தொடரவேண்டும் என வாழ்த்தி அதற்காக அருகில் கோயில் கொண்டருளும் மகாவேலன் தெனிப்பிள்ளையாரைப் பணிந்து அமைகின்றேன்.

- திரு. கி.குகநாதன்,
தலைவர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம்.

சிவராஜ் ரேடிங் கோ
பஸ் நிலையம் - பருத்தித்தறை.

றஞ்சன் கேபிள் டீவி இணைப்பாளர்
தம்பசிட்டி - பருத்தித்தறை.

தீபன் அச்சகம்
வி.எம். வீதி - பருத்தித்துறை.

குலேன் களஞ்சியம்
கதிரைவேற்பிள்ளை வீதி - தம்பசிட்டி.

# மரண அறிவித்தல்



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட

## திருமதி சுகிர்தம் துரைசிங்கம்

வெள்ளிக்கிழமை **(24.02.2012)** இறைவனடி சேர்ந்தார்.

இவர், அமரர் திரு.திருமதி துரையப்பா தம்பதியரின் பாசமுள்ள மகளும்,
காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் மறைந்த திரு. S.A.F. துரைசிங்கத்தின்
அன்பு மனைவியும்,
றோச்சுமுத்து, அமரர் டொமினிக், புனிதம், அமரர் ஜேன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,
மாகிறேற், ஜேமணி, அல்பிரட், கியூபேர்ட் ஆகியோரின் அருமை மைத்துனியும்,
S.A. ஞானரத்தினத்தின் அன்பு மாமியும்,
கிளீட்டஸ், ஜெனிற்றா, பொலிற்றா, அருட்செல்வி பெலிசிற்றா, கமிலஸ், குயின்ரஸ், ஜொவிற்றா, விஜிற்றா, மெரிற்றா
ஆகியோரின் பாசமுள்ள தாயாரும்,

கிளாறற், அமரர் மரியாம்பிள்ளை, மரியதாசன், ஜெஸ்ரினா, டீலியா, டொன்பொஸ்கோ, அருள், ராம்நாத்
ஆகியோரின் பிரியமுள்ள மாமியாரும்,
தமிழினி-சுதாகரன், விவேக், செறின், நிஷன்-தனுஷா, திவ்யா, டினோ, யுவன்-மெலோனி, நவீன், கிளேமென்ஸ், ஜொலன்ரா,
லறிசா, சங்கீத், கவீந்த், பெனோஜ், பெவான், யூடி, சந்தோஷ், கிறிஸ், எய்டன், ரம்யா ஆகியோரின் பாசமுள்ள பேத்தியும்,
நிதுஷா, றோஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை 25ம் திகதி மாலை 4 மணி முதல் 9 மணிவரையும்
இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் 9 மணிவரையும் பார்வைக்காக வைக்கப்படும்.
திங்கட்கிழமை 27ம் திகதி காலை 9 மணிமுதல் 10 மணிவரை மீண்டும் பார்வைக்காக வைக்கப்பட்டு,
பின்னர் காலை 10:30க்கு, திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.
ஆலய வழிபாடுகளைத் தொடர்ந்து நல்லடக்கத்திற்காக சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

**பார்வைக்காக வைக்கப்படும் இடம்:**

Visitation at Chapel Ridge Funeral Home located 8911 Woodbine Avenue, Markham, Ontario, L3R 5G1 (Woodbine Ave & Highway 7)

Saturday 25th February, 2012 from 4pm to 9pm
Sunday 26th February, 2012 from 5pm to 9pm

திருப்பலி நடைபெறும் இடம்:

**Service on Monday the 27th February, 2012**
at Prince of Peace Catholic Church at 10.30 AM
located at 255 Alton Towers Circle
Scarborough, Ontario, M1V 4E7
(McCowan & Steeles).

சேமக்காலை விபரம்:

**Burial at Christ the King Cemetery**
located 7770 Steeles Avenue East
Markham, Ontario, L6B 1A8
(Steeles & East of Morningside)

மேலதிக தொடர்புகளுக்கு:

DonBosco (Canada) : 1-905-832-1673
Quintus (Canada) : 1-416-219-5113
Ramnath (Canada) : 1-416-858-5406
Cletus (Netherlands) : (78) 6170540
Camillus (Germany) : (49) 208 854 006
Hubert (Sri Lanka) : (94) 112 435035

# ZOA

RELIEF | HOPE | RECOVERY

சோ-ஆ என்பது 1995 தொடக்கம் முரண்பாடுகளாலோ அல்லது இயற்கை அனர்த்தங்களாலேயோ பாதிப்புற்ற மக்களுக்கு ஆதரவு வழங்கும் களம் சார்ந்த ஒரு மீள்குடியேற்ற அமைப்பு ஆகும். பின்வரும் பணிநிலையிலே வவுனியா நிகழ்ச்சித் திட்டத்திலே மீள்குடியேற்ற சமூகங்களுக்கு உதவிகள் வழங்குவதற்கென உயர்ந்த பண்பாற்றல் கொண்ட ஆட்களை நாம் தேடுகிறோம்:

## செயற்திட்ட இணைப்பாளர்

கடமைகள்:

- திட்டப் பிரேரணைக்கும் நிதிவழங்குனரின் முன்தேவைகளுக்குமேற்ப நிதித்திட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், தொடரும் கண்காணிப்பு உள்ளிட அனைத்து செயற்திட்டங்களையும் அமுல்படுத்துவதற்கு முழுப்பொறுப்பைக் கொண்டிருத்தல்.
- செயற்திட்டத்தின் வினைத்திறன்கொண்ட அமுலாக்கத்துக்கென அரசாங்கம், வர்த்தக சமூகம் மற்றும் இதர மனிதநேய/அபிவிருத்தி அமைப்புக்களுடனும், பங்காள அமைப்புக்களுடனும் கூட்டுறவைப் பேணுதல்.

முன்தகைமைகள்:

- 3 வருட நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவம் அல்லது தனியார் துறை நிர்வாக அனுபவம், குறிப்பாக உற்பத்தி, பெறுமதி சேர்த்தல், அறுவடைக்குப்பிந்திய தொழில்நுட்பம் மற்றும் சந்தைக்கான அடைவுவழி பெறுதல் ஆகியவைகளை உசிதமாக்குதலிலே அனுபவம்.
- வர்த்தக நாட்டத்துடனான வலிய தொழிலூக்க மனோநிலை
- வியாபார அபிவிருத்தி அல்லது ஜீவனோபாய அபிவிருத்தியிலே சமூகத்துடன் பணியாற்றியிருத்தலிலே எய்தியுள்ள நிரூபிக்கக்கூடிய சாதனைகள்
- பல்துறைச் செயற்திட்டங்களை நிர்வகிப்பதிலும், கணக்கொப்புவிப்பு மற்றும் பங்கேற்பு மதிப்பீடுகளுடனான பங்காளித்துவ நிர்வகிப்பிலும் அனுபவம்.
- பல்துறைப் பிரிவுகளைப் பயிற்றுவித்து நிர்வகித்தல்
- வலிந்த வலையமைப்பு மற்றும் நல்ல அறிக்கைசமர்ப்பித்தல் திறமைகள்
- கிராமிய சூழல்களிலே தங்கியிருந்து பணியாற்றுவதற்கு விருப்பமும், கிராமிய வியாபார இயக்கம் பற்றிய வலிமையான புரிந்தறிவும்.
- ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமான மொழித்திறன். சிங்களத்திலும் சரளமான மொழித்திறன் விரும்பத்தக்கது.

பெண்தேர்வுநாடிகள் விண்ணப்பிக்கும்படி குறிப்பாக ஊக்குவிக்கப்படுகின்றனர். தெரிவுசெய்யப்படும் தேர்வுநாடிக்கு சோ-ஆ சிறந்த ஊதியப்பொதியை வழங்கும்.

இந்தவேலைக்கு ஏன் நீங்கள் பொருத்தமானவர்கள் என்பதைத் தெரிவிக்கும் ஒரு கடிதத்துடன், உங்களது முழுமையான சுயவிபரக்கோவையை சொந்தமல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் தொடர்பு இலக்கங்கள் ஆகியவற்றுடன்கூட jobs@zoasrilanka.org எனும் மின்னஞ்சலுக்கோ அல்லது தரப்பட்ட விலாசத்துக்கோ மார்ச் 5, 2012 இற்கு முன்பதாக, அனுப்பிவைக்கவும். (தயவுசெய்து மின்னஞ்சலில் அல்லது கடித இடது மேல்மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பணிநிலையைத் தெரிவிக்கவும்)

மனிதவளங்கள் அலுவலர்
சோ-ஆ இலங்கை
32/10, றெயில்வே அவெனியூ,
கொழும்பு 05
தொலைபேசி: (011) 7 539600
மின்னஞ்சல்:jobs@zoasrilanka.org

தெரிவுசெய்யப்பட்ட தேர்வுநாடிகள் மாத்திரமே அழைபீட்டு அறிவிக்கப்படுவார்கள்.

## பயிற்சி நெறி

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரச அதிபர்பணிமனைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு உற்பத்தித் திறன் மேம்படுத்தல் பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை 8மணி தொடக்கம் யாழ் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத் தர்களால் பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது. பிரதேச செயலர் உதவி அரச அதிபர் உட்பட ஐந்து உத்தியோகத்தர்களை கலந்து கொள்ளுமாறு யாழ் அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்

(ம-9)

## விற்பனைக்கு

அளவெட்டி தெற்கு பிரதான வீதியில் அழுக்கை சந்தி அண்மையில், நல்ல சூழலில் கடைகள், வீடுகள் கட்டுவதற்குகந்த, கிணற்றுடன் **10 பரப்பு காணி**, இரு பகுதிகளாக விற்பனைக்குண்டு.

**0779117105**

## உடன் விற்பனைக்கு

252 - XXXX கயஸ் டொல்பின் G.L மொடல், 5L எஞ்சின், றொட்டேசன் சீட், எல் - ஒவீல், டுவல்ஏசி, மனுவல் கியர் உடைய நீளமான கயஸ் டொல்பின் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 3610702
077 9577974

(C/8321)(6-7-8)

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசமூர்த்தி

(இளைப்பாறிய கிராம உத்தியோகத்தர்-விடத்தற்பளை)



விடத்தற்பளை, மிருசுவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசமூர்த்தி 24.02.2012 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் விடத்தற்பளை, மிருசுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், உசனைச் சேர்ந்த வைத்திலிங்கம் (இளைப்பாறிய தபால் ஊழியர்)-காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட மருமகனும் சந்திராதேவியின் (சந்திரா) அன்புக் கணவரும், Dr. காந்தரூபன் (வைத்தியசாலை மட்டக்களப்பு), கீதாஞ்சலி (யாழ்/இந்து ஆரம்ப பாடசாலை), உபாசனா (HNB யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அஜாந்தினியின் (ஆசிரியை, திருகோணமலை, நொச்சிக்குளம் அ.த.க. பாடசாலை) அன்பு மாமனும், புஸ்பராணி, மனோரஞ்சிதம் (லண்டன்), மனோகரன் (ஆசிரியர், கொடிகாமம்/திருநாவுக்கரசு ம.வி), கருணாதேவி (லண்டன்), பத்மாதேவி (பிரான்ஸ்), மாயவதீபன் (இத்தாலி), பிரதாபன் (பிரான்ஸ்), முரளிதரன் (லண்டன்), திருமகள் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சிவானந்தம் (இளைப்பாறிய உபதபால் அதிபர்), வினோத் (லண்டன்), மனோரஞ்சிதம், உதயமூர்த்தி (லண்டன்), கபிலன் (பிரான்ஸ்), சந்திரிக்கா (இத்தாலி), பானு (பிரான்ஸ்), ரூபி (லண்டன்), குமார் (லண்டன்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 09, உடையார் ஒழுங்கை,
பழம் வீதி, கந்தர்மடம். (15035) (6,7,10)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## London South Bank University

### Study in UK




**அடிப்படைக் கற்கைநெறி, உயர் தேசிய டிப்ளோமா (HND), பட்டம் பெறாக் கல்லூரி மாணவர், ஆரம்ப முதுநிலை, பட்டப் பின் படிப்பு மற்றும் ஆய்வுப் பட்ட கற்கைத் திட்டங்கள்.**

அளிக்கப்படும் பாடநெறிகளில் உள்ளடங்கியவை:

- கணக்கியலும் நிதியும்
- கட்டிடக் கலை
- அபிவிருத்திக் கல்வி
- மனித வளம்
- தகவல் தொழில் நுட்பம்
- பன்னாட்டு வணிகம்
- சட்டம்
- வணிக நிர்வாக முதுமாணி (MBA)
- சந்தைப்படுத்தல்
- சுற்றுலாவும் விருந்தோம்பலும்
- பொறியியல்
- கட்டிட நிர்மாணம்
- இரசாயனம்
- பொதுவியல் மற்றும் கட்டமைப்பு
- கணினி அமைப்பு மற்றும் வலையமைப்பு
- மின்சாரம் மற்றும் இலத்திரனியல்
- இயந்திரவியல்
- பெற்றோலியம்
- தொலைத் தொடர்பாடல்

☞ 1000 பவுண் தேசிய புலைமப் பரிசில்

☞ நேரத்தோடு கட்டணம் செலுத்துவோருக்கு 5% கழிவு வழங்கப்படும்.

பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட HND சான்றிதழ் வைத்திருக்கும், இலண்டன் வெளிவாரி மாற்றல் LL.B. மாணவர்கள், பொறியியல் அல்லது வணிக மாணவருக்கு விதிவிலக்கு உண்டு.

மாணவர் ஆலோசனையும் உடனடி அனுமதியும் பெற மார்ச் 12 ம் திகதி

கொழும்பில் சிரேட்ட பன்னாட்டு அலுவலர் லூசி கெட்டிலை சந்திக்கவும்.

இடம் : புரொவிசிக்ஸ் சிட்டி, இல. 6, M-2, IBC வீதி, கொழும்பு-6
திகதி : 2012, மார்ச் 12, திங்கட்கிழமை
நேரம் : மு. ப. 9.00 முதல் பி. ப. 4.00 வரை.

மேலும் விபரங்களுக்கும் சந்திப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் LSBU வின் கடல்கடந்த பிரதிநிதிகளின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்:-

தொலைபேசி : ஜெயா - 0777318582, 2360062.
அல்லது
ஸீனா - 2364266.
Email : jeyacosl@yahoo.com
முகவரி: லோட்டஸ் குறோவ், 248/186, ஹில் வீதி,
(ஓவ்ப் - கப்டன் சுமுது ராஜபக்ஷமாவத்தை, தெகிவளை, இலங்கை.

## நாய்க்குட்டிகள் விற்பனை

2 1/2 மாதம் நிரம்பிய அல்சேசியன் பெண் நாய்க்குட்டிகள் தடுப்பூசி போடப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6146501 , 021 4900836

## காணி விற்பனைக்கு

தொண்டைமானாறு பிரதான வீதி (Main Road) மதவடியில் கிணறு, சுற்றுமதில், திருத்தம் செய்யப்பட வேண்டிய வீட்டுடன் கூடிய 3 பரப்பு (1 குளி குறைய) காணி உடன் விற்பனைக்கு உண்டு. கூடிய விலை கோருவோருக்கு முன்னுரிமை கொடுக்கப்படும்.

**தொடர்பு - 011 - 2715550**

## காணி குத்தகைக்கு தேவை

நாவற்குழி, கைதடி பிரதேசத்தில் A9 பகுதியை அண்டிய நீர், மின்சார வசதியுடன் கூடிய 4 பரப்புக் காணி தேவை

தொடர்பு: 077 029 4160

## கார் விற்பனைக்கு

மன்னாரில் டாக்டரின் பாவனையில் உள்ள Toyota Corolla CE 90 64 - 52 xx டீசல் கார் (Full Option)விற்பனைக்கு உண்டு.

விற்பனை விலை - 12.50 ரூபா

தொடர்பு: 077 9949497

## Franchise Enquires Solicited

கணனி வள முகவர்கள் தேவை

Jaffna, Vavuniya, Mannar, Kilinochchi, Mullaithvu, Batticaloa, Trincomalee, Ampara

MULTIMEDIA
ANIMATION
GRAPHIC DESIGNING
WEB DESIGNING
SOFTWARE
HARDWARE & NETWORKING
ACCOUNTING
G-ENGLISH

IAB
International Association of Book-Keepers - UK

Existing centers & New centers can apply

Operating in
Sri Lanka, India,Dubai, Iran, Qatar, Kuwait , Singapore & Mexico

India, Singapore & UK Certification

**G-TEC COMPUTER EDUCATION**

152/1B, Sea street, Negombo
vakilan.lka@gteceducation

146/20, Thimbirigasyaya Junction Havelock Road, Colombo 5.

www.gteceducation.com Call : 071-4860222

ADM. OFFICE : HOUSE OF G-TEC CALICUT - 673 002 , INDIA - CORP.OFFICE : PEACE CENTRE, SINGAPORE 228149

## வீடு விற்பனைக்கு

மீசாலை, அல்லாரை வீதியில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0779711972

## கண்ணீர் அஞ்சலி

எமது கிளையின் பிரதான முகாமையாளர்
அ.மகாதேவா அவர்களின் பாசமிகு துணைவி

### திருமதி தனலட்சுமி மகாதேவா

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்.
இலங்கை வங்கி, அதி மேற்தரக்கிளை,
யாழ்ப்பாணம்.
(சி/8339) (2-7-9)

## பணியாளர் தேவை

1. கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்துக்கு முகாமையாளர் ஒருவர் உடன் தேவை. சமய ஆசாரங்களைச் செய்து பின்பற்றுபவராயும் 25 வயதுக்கு மேற்பட்ட க.பொ.த (சா/த) சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

ஆண் பாலர் மட்டும் விண்ணப்பிக்கவும்

ஆலயத்தில் தங்கியிருந்து சேவை செய்யக்கூடியவர் விரும்பத்தக்கது

03.03.2012 இற்கு முன்பாக தலைவருக்கு கீழ்காணும் முகவரிக்கு தபால் மூலம் விண்ணப்பிக்கவும்

2. மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்துக்கு கணினியில் அனுபவமுள்ள ஆண் பாலார் தேவை. போட்டோசொப், இணையத்தினை வடிவமைத்து இயக்கும் ஆற்றல், மின்னஞ்சல் கடிதத்துக்கு ஆங்கிலத்தில் பதிலளிக்கும் ஆற்றல் அவசியமாகும்.

சகல கல்விச் சான்றிதழ்களுடனும் 3.3.2012 இற்கு முன் தலைவருக்கு கீழ்க் காணும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தி. இராசநாயகம்,
தலைவர்,
மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி. (11044) (45-6-7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 ★ 08 ★ 1929

மறைவு 08 ★ 02 ★ 2011

### ஐயாத்துரை மனோன்மணி

(திதி - பஞ்சமி)

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டுப் பிரியாது
தவிக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
மல்லாகம்.
(15028)(6-7-8)
குடும்பத்தினர்.

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வேலுப்பிள்ளை சின்னத்துரை

([illegible])

திதி: 26.02.2012

மலர்வு
09★11★1938

உதிர்வு
08★03★2003

அன்பு கலந்து அமுதூட்டி ஆற்றாமல் அழுவார்க்கு தென்பு ஊட்டி ஆறுதலும் ஆதரவுமளித்து மாமாவுமாய் தந்தையுமாய் நாங்கள் நல்வாழ்வு வாழ வழி காட்டியாய் நல்லுபதேசம் செய்யும் குருவாய் நல்லருள் புரியும் தெய்வமுமாய் எங்களுடன் வாழ்ந்த நீங்கள் எங்களை விட்டு நீங்கி ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் நாங்கள் ஒன்றித்து வாழ்ந்த வாழ்வின் நினைவுகள் மாறிடுமோ.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆன்மா சாந்தியடைய
என்றும் பிரார்த்திக்கும்
இ. தெய்வேந்திரம்
(மருமகன்)

வாதரவத்தை
புத்தூர்.
(15030) (45-6-7)

## Galaxy Cabs
021 - 3201201

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் இயந்திரம் சில்வர் கிறீம் மீற்றர், பாத், கொம்பிரேசருடன் விற்பனைக்குண்டு. (இங்கிலாந்து)

தொடர்பு : 077 4405718, 077 8759584

## வீடு வாடகைக்கு

யாழ். அரசடி வீதி, கந்தர்மடம் சந்திக்கு அருகில் 1 3/4 பரப்பில் இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய 6 அறைகள் கொண்ட வீடு, அரச/ அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு - 0776 948555, 0773 274014

## அறை வாடகைக்குத் தேவை

அரச உத்தியோகத்தர்களுக்கு யாழ். நகரில் இருந்து 4 km க்குள் அறை தேவை. வாடகை 2000/= (பேசித் தீர்மானிக்கலாம்)

தொடர்பு - 07777 26233, 0714547090

## வாடகைக்கு

ஐந்துபேர் கொண்ட குடும்பத்துக்குத் தனி வீடு ஒன்று நியாயமான வாடகைக்குத் தேவைப்படுகிறது. யாழ்.மாநகர எல்லைக்குள் விரும்பத்தக்கது. விற்பனைக்கு இருப்பினும் கவனத்தில் கொள்ளப்படும். தரகர்கள் தேவையில்லை.

தொடர்பு - 0717124037

## வெற்றிடம்

பிரபல ஆள்சேர்ப்பு கம்பனியில் தொழில்சார் சந்தைப் படுத்தல் உத்தியோகத்தராகப் பணிபுரிய ஓர் அரிய வாய்ப்பு

* இத்துறை தொடர்பான அனுபவத்துடன், ஆங்கில, சிங்கள, தமிழ் மொழிகளில் சிறந்த தொடர்பாடல் ஆற்றல் உடையவராக இருத்தல்
* கவர்ச்சிகரமான சம்பளத்துடன் தரகுப் பணமும்.

தொடர்பு -(வார நாள்களில்) 0772880444

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள மனோகரா தியேட்டருக்கு அண்மையில் உள்ள சிறிய வீட்டுடன் கூடிய காணி (2½ பரப்பு) உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு: 0777587947

## வேலை வாய்ப்பு

யாழ்.நல்லூர் பகுதியில் இயங்கும் தொழில் பட்டறைக்கு கேற், கிறில் செய்யக்கூடிய

★ வெல்டர்
★ வேலை பழக விரும்புவோர் தேவை

தொடர்பு: 077 3760594

## வேலை வெற்றிடம்

முகாமைத்துவ முன்னுரிமையுடன், சிறந்த பயிற்சியுடன் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் கனேடிய நிறுவனத்தின் வவுனியா, யாழ்ப்பாணம் கிளைகளில் (மேற்பார்வையாளர், பிரதி முகாமையாளர், முகாமையாளர்) வேலைக்கான பதவி வெற்றிடங்கள் கோரப் படுகின்றன. தகைமை - O/L, A/L கற்றிருத்தல்

பயிற்சி காலத்தில் ஒரு கிழமைக்கு 4000 - 5000
பயிற்சியின் பின் 45,000

தொடர்புகளுக்கு.
(1). 077 6446390, (2). 077 9748791
(3). 077 0308484
(4). 024 7900171

## தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த T.பிரதீபா என்பவருடைய பேராதனைப் பல்கலைக்கழக அடையாள அட்டை திருநெல்வேலியில் அமைந்துள்ள திருமுருகன் கொம்நெற்றில் கைமாறிக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனை எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு - 0777 207623, 021 222 7560

## காணி விற்பனைக்கு

கண்டி வீதி (A9), நாவற்குழியில் (அரச உணவுக் களஞ்சியத்திற்கு முன்பாக) நான்கு (4) பரப்பு முட்கம்பி வேலியிடப்பட்ட, நல்ல தண்ணீர் கிணற்றுடனும் புதிதாக அமைக்கப்பட்ட 27' x 37' அடி விஸ்தீரணம் கொண்ட முதற்தளம் பிளாற் இடப்பட்ட கட்டிடத்துடனும் கூடிய காணி விற்பனைக்குண்டு.
(மூன்று மாடிக்குரிய அடித்தளம் இடப்பட்ட கட்டடம்)

தொடர் : 077 3080344

## ஸ்ரீ ரஞ்சனி புத்தகசாலையின்

ஸ்டார் பப்ளிகேசன் வெளியீடுகள்
யாழ்ப்பாணத்திலும் கிடைக்கும்
190A, ஜம்பட்டா வீதி, கொழும்பு - 13, 011 4947856

தரம் 01 முதல் O/L

பரீட்சை நோக்கு, பரீட்சைப் பொதி, அறிவொளி, விஞ்ஞான ஒளி, கணித வழி, அறிவொளி புலமைப்பரிசில் நேர் வழிகாட்டி, புதிய பாடத்திட்ட விஞ்ஞான புத்தகங்கள், விஞ்ஞானம் - 30 வருட கடந்தகால வினாக்கள், விஞ்ஞானம் - பாடசாலைகளுக்கு மட்டுமான வினாத்தாள்கள் தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகள் - இ. நிர்மலன், 0777 413990

## பதவி வெற்றிடம்

ISO தரச்சான்றிதழ் பெற்ற இலங்கையின் பிரபல காப்புறுதி கம்பனி ஒன்றுக்கு முதலீட்டு உதவியாளர் தரம் I,II இற்கான விண்ணப்பம் கோரப்படுகிறது. தொலைபேசி இலக்கத்துடன் சுயவிவரக்கோவையை 05.03.2012 இற்கு முன்னராக அனுப்பி வைக்கவும்.

★ தகைமை O/L, A/L
★ சம்பளம் + ஊக்குவிப்புத் தொகை
★ ETF, EPF
★ எல்லையற்ற வருமானம்
★ வெளிநாட்டுப் பயணம்

விளம்பர இலக்கம்: 4224,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(15040) (2-7-9)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியர்
முரளி அவர்களின் அன்புத் தாய்

### திருமதி நீலாம்பிகை கணபதிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.
(15070) (2-7-9) யா/நாவற்குழி மகா வித்தியாலயம்.

## யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் (ஸ்ரான்லி கல்லூரி) பழைய மாணவர் சங்கம்

### பொதுக்கூட்டமும் மதியபோசன விருந்தும்

காலம் : இன்று (26.02.2012) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10 மணி
இடம் : கல்லூரி பிரதான மண்டபம்
தலைவர் : S. விஜயகாந் அவர்கள்

நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம்
★ வரவேற்புரை / தலைமை உரை
★ அதிபர் உரை
★ சென்ற வருட (2011) பொதுச்சபைக் கூட்ட அறிக்கை
★ செயல் அறிக்கை (2011)
★ நிதி அறிக்கை (2011)
★ அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்
★ வேறு விடயங்கள்
★ புதிய செயற்குழு தெரிவு
★ நன்றியுரை
★ கல்லூரிக் கீதம்
★ மதிய போசன விருந்து

முக்கிய குறிப்பு

★ இதுவரை அங்கத்தவராகச் சேராதவர்கள் சாதாரண அங்கத்தவராயின் ரூபா முந்நூறும் ஆயுள் அங்கத்தவராயின் ரூபா ஆயிரமும் செலுத்தி அங்கத்தவராகலாம்.
★ மதிய போசன விருந்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் ரூபா 200/= ஐ A. ஜெயகுமார் ஆசிரியரிடம் பாடசாலையில் செலுத்தி தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளவும்.
★ முகவரி மாற்றத்தை உடனுக்குடன் அறியத் தந்து தொடர்பு ஏற்படுத்துவதற்கு உதவவும்.
★ முகவரி மாறியுள்ள அங்கத்தவர்களுக்கு மேற்படி நிகழ்வு பற்றி அறிவித்தலை பகிர்ந்துகொண்டு சங்கத்தின் வளர்ச்சிக்கும், பாடசாலையின் முன்னேற்றத்துக்கும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(சி/8333) (45-6-7) பொன். தர்மேந்திரன் (செயலாளர்)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு சுப்பிரமணியம் (காந்தி)



தம்பாலை, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், மீசாலை (வேம்பிராய்)யை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சுப்பிரமணியம் (காந்தி) (24.02.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - காலஞ்சென்ற இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், அன்னபூரணம் அவர்களின் அன்புக் கணவரும், கிறோஜிகா, வாசிகா, விதுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினம், சித்திரவடிவேலு, யோகராசா, தவம், காலஞ்சென்ற பரஞ்சோதி, காலஞ்சென்ற தனலட்சுமி, ஆறுமுகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-02-2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை,
வேம்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.
(சி/8330) (2-7-6)

# வென்றது ஆபிரிக்கா

"நியூஸிலாந்துக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி ஆறு இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது."



நதன் மக்கலம்



# சரிந்தது நியூஸிலாந்து





ஆட்டநாயகன் டீ வில்லியர்ஸ்

நியூஸிலாந்து- தென்னாபிரிக்கா அணிகள் மோதும் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டம் நேற்று வெல்லிங்டனில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணியின் தலைவர் பிரண்டன் மக்கலம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

நியூசிலாந்து அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய ராப் நிகோல் 30 ஓட்டங்களும், மார்டின் குப்தில் 7 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அதன்பின் களமிறங்கிய பிரண்டன் மக்கலம் 56 ஓட்டங்களும், வில்லியம்சன் 55 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதையடுத்து நியூஸிலாந்து அணி 50 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகள் இழப்பிற்கு 253 ஓட்டங்கள் எடுத்தது. பந்து வீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் ரொஸ்ரோபே, மோர்னி மோர்கல், றொபின் பீற்றர்ஸன், கலிஸ் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

254 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்க அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அம்லா 8 ஓட்டங்களும், ஸ்மித் 9 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.


அடுத்து களமிறங்கிய கலிஸ் 13 ஓட்டங்களும், டுமினி 46 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

டி வில்லியர்ஸ் சதத்தை கடந்து 106 ஓட்டங்களுடனும், பிளஸ்ஸிஸ் 66 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

தென்னாபிரிக்க அணி 45.2 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகள் இழப்பிற்கு 254 ஓட்டங்கள் எடுத்து 6 இலக்குகள் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணியை வீழ்த்தியது. (5)

# சந்திமால் இலங்கை கண்டுபிடித்த அதிசய வீரர்

"தினேஷ் சந்திமால் என்ற விசேட வீரரை தமது அணி கண்டுபிடித்துள்ளதாக இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்."



ஹோப்பாட்டில் ஆஸ்திரேலியா அணிக்கெதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் 80 ஓட்டங்களைப் பெற்ற சந்திமால் இலங்கை அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றியிருந்தார். ஆஸ்திரேலிய, இந்திய மற்றும் இலங்கை அணிகள் பங்குபற்றும் முத்தரப்பு தொடரில் 61.20 என்ற சராசரியில் 306 ஓட்டங்களை சந்திமால் பெற்றுள்ளார்.

தொடரில் அதிக ஓட்டங்களைப் பெற்றுள்ள சந்திமால், நான்காம் இலக்க துடுப்பாட்ட வீரராக விளையாடுவது சிறந்தது எனவும் மஹேல ஜெயவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். அடுத்த பத்து ஆண்டுகளில் இலங்கை அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்களில் ஒருவராக அவர் இருப்பார் எனவும் மஹேல ஜெயவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த ஆட்டத்தில் 281 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49 ஆவது பந்து பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை கடந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமது அணியின் பந்துவீச்சு மேம்படுத்தப்பட வேண்டுமென ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்றைய தினம் இந்திய அணிக்கெதிரான ஆட்டத்தில் விளையாடவுள்ள ஆஸ்திரேலிய அணியில் ஷேன் வொட்சன் இணைத்துக் கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

# கருத்து வேறுபாடு இல்லை - மைக்கல் கிளார்க்

"வீரர்களை தெரிவுசெய்வதில் மைக்கல் கிளார்க்கின் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்தது"

மும்முனைக் கிரிக்கெட் தொடருக்கான ஆஸ்திரேலிய குழாமிலிருந்து ரிக்கிப் பொண்டிங் நீக்கப்பட்டமையால் தமக்கும் அவருக்கும் இடையில் எந்தவித பிரச்சினைகளும் ஏற்படாது என்று அணித் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

அணிக்கான வீரர்களை தெரிவுசெய்வதில் மைக்கல் கிளார்க்கின் பொறுப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்ற நிலையில், அணியின் எதிர்காலம் கருதியே ரிக்கி பொண்டிங் அணியிலிருந்து நீக்கப்பட்ட தாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் தெரிவுக்குழுவின் இந்த தீர்மானம் குறித்து ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் முன்னணி வீரர்கள் பலர் ஆதரவான கருத்துக்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# மூன்றாகப் பிரியும் இந்திய அணி

"மூன்று அணித்தலைவர்கள் முறையை இந்திய கிரிக்கெட் சபை சோதனை ரீதியாக அமுல்படுத்திப் பார்க்கலாம். இதில், வெற்றி கிடைக்கும்பட்சத்தில், இந்திய அணியின் தோல்விப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்."

இந்திய அணிக்கு மூன்று அணித்தலைவர்களை நியமிப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த முறை ஏற்கனவே இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலிய அணிகளில் வெற்றிகரமாக அரங்கேற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் 2013 இல் டெஸ்ட் போட்டியில் இருந்து விடைபெற இருப்பதாக டோனி அறிவித்துள்ள நிலையில், அடுத்த கட்ட மாற்றத்துக்கு இந்திய அணி ஆயத்தமாகிறது.

ஆஸ்திரேலிய மண்ணில் இந்திய அணி தொடர் தோல்விகளை சந்திக்க, விமர்சனக் கணைகளில் சிக்கித் தவிக்கிறது. இது போதாதென்று அணித் தலைவர் டோனி, சேவாக் இடையிலான மோதலும் நிலைமையை மோசமாக்கியது. தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வாக, டெஸ்ட், ஒரு நாள் ஆட்டம், 'ரி-20' என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக அணித் தலைவர்களை நியமிக்க வேண்டுமென முன்னாள் வீரர் கங்குலி கூறினார். தற்போது அதிகமான கிரிக்கெட் போட்டி இருப்பதால், இந்த முறையை தேர்வாளர்கள் கையாளலாம் என்று யோசனை கொடுத்தார். இதனை ஏற்கனவே இங்கிலாந்து (ஸ்ரோரஸ், அலெஸ்டர் குக், ஸ்டூவர்ட் புரோட்), தென்னாபிரிக்கா(கிரேம் ஸ்மித், டி விலியர்ஸ்), ஆஸ்திரேலியா (மைக்கல் கிளார்க், ஜோர்ஜ் பெய்லி) அணிகள் பின்பற்றி வருகின்றன. முன்பு இந்திய அணியில் கூட கும்ளே (டெஸ்ட்), டோனி (ஒருநாள், 'ரி-20') என்று இரண்டு அணித்தலைவர்கள் இருந்தனர். கும்ளே ஓய்வுக்குப் பின்னர்தான் டோனியின் தனி ஆவர்த்தனம் ஆரம்பமானது.

### கம்பீர் வாய்ப்பு

டோனியை பொறுத்தவரை டெஸ்டில் பெரிதாக சாதிக்க முடியவில்லை. இவரது தலைமையில் இந்திய அணி தொடர்ந்து 7 டெஸ்ட் போட்டியில் தோல்வியைச் சந்தித்தது. தவிர, 2013 இல் டெஸ்டில் இருந்து விடைபெற திட்டமிட்டுள்ளார். சச்சின், லக்ஸ்மன், டிராவிட் ஆகியோர் ஓய்வு பெறும் நிலையில் உள்ளனர். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான அடிலெய்டு டெஸ்டில் அணித் தலைவராக சேவாக் சோபிக்கவில்லை. இவர்களை தவிர்த்தால் கம்பீர் மட்டுமே மூத்த வீரராக உள்ளார். இவரை டெஸ்ட் ஆட்டத்துக்கு அணித் தலைவராக நியமிக்கலாம். ஏற்கனவே ஒரு நாள் ஆட்டங்களில் அணியை வழிநடத்திய அனுபவம் உண்டு. போராடும் குணம் கொண்ட இவர், களத்தில் கங்குலியை போல கண்டிப்புடன் நடந்து கொள்வார்.

### டோனி தொடரட்டும்

ஒரு நாள் போட்டியில் டோனி அசைக்க முடியாத வீரர். அணிக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த பெருமைக்குரியவர். டெஸ்டில் சோபிக்காத இவர், ஒரு நாள் அரங்கில் தொடர்ந்து அசத்துகிறார். இதுவரை 201 போட்டியில் 6,688 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் சராசரி 51.44.

### வருகிறார் ஹோக்லி

டோனி ஏற்கனவே 'ரி-20' உலகக் கிண்ணத்தை வென்றுவிட்டார். இனி இந்த வகை கிரிக்கெட்டில் இவர் சாதிக்க ஒன்றும் இல்லை. எனவே, 'ரி-20' அணியின் தலைமைப் பொறுப்பை இளம் வீரரான விராத் ஹோக்லி வசம் ஒப்படைக்கலாம். (5)

# புனேவாரியஸில் சாமுவேல்ஸ்

மார்லன் சாமுவேல்ஸ்

இதுவரை 42 'ரி-20' போட்டியில் கலந்து கொண்டு 1128 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

ஐ.பி.எல் 'ரி-20' தொடருக்கான புனே வாரியர்ஸ் அணியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகல துறை ஆட்டக்காரர் மார்லன் சாமுவேல்ஸ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல் நிர்வாகத்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டை அடுத்து பெங்களூரில் கடந்த 4 ஆம் திகதி நடந்த வீரர்கள் ஏலத்தை புனே வாரியர்ஸ் புறக்கணித்தது.

பின்னர் நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதை அடுத்து, புனே அணியில் புதிய வீரர்களை ஒப்பந்தம் செய்ய இந்த மாதம் 29 ஆம் திகதி வரை அனுமதி அளிக்கப்பட்டது. இதையடுத்து புனே அணியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சகலதுறை வீரர் மார்லன் சாமுவேல்ஸ் 2 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் 5 ஆவது சீசன் முதல் பாதி லீக் ஆட்டங்களில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (5)

# 95 ஆவது பொன் அணிகள் போர்

# வெற்றியைப் பறித்தது பற்றிக்ஸ்





பற்றிக்ஸ் அணித் தலைவர் கிளிங்ரன் வெற்றிக் கிண்ணத்தை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

யாழ்ப்பாணம், பெப்.26

95ஆவது பொன் அணிகள் போரில் யாழ்ப்பாணக் கல்லூரியை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி பற்றிக்ஸ் கல்லூரி வென்றது.

யாழ்ப்பாணம் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் பொன் அணிகள் போரில் 95 ஆவது போட்டி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற பற்றிக்ஸ் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. 226 ஓட்டங்களுடன் சகல இலக்குகளையும் அது இழந்தது. எனினும் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணியை பற்றிக்ஸ் அணி பந்தாடியது. இதனால் முதல் ஆட்ட நேர நிறைவில் 6 இலக்குகளை இழந்து 94 ஓட்டங்களை மாத்திரமே யாழ்ப்பாணக் கல்லூரியால் பெற முடிந்தது. அந்த அணியில் கஜேந்திரனும் மாதவரூபனும் இலக்குகள் தொடர்ந்தும் விழாமல் தடுத்தாடிக் கொண்டிருந்தனர்.

இரண்டாம் நாள் ஆட்டம் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. எனினும் தொடர்ந்தும் பற்றிக்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களுக்கு முன்னால் யாழ்ப்பாணக் கல்லூரி சரணாகதி அடைந்தது. 111 ஓட்டங்களை மாத்திரமே முதல் இன்னிங்ஸிக்காக அந்த அணியால் சேர்க்க முடிந்தது. யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் இறுதி இரு இலக்குகளும் அடுத்தடுத்து வீழ்த்தப்பட்டன.

பற்றிக்ஸ் அணியின் லிவிங்ரன் அபாரமாகப் பந்து வீசி 4 இலக்குகளையும், நோவேட் 3 இலக்குகளையும், அஜித் டார்வின் 2 இலக்குகளையும், நிஷர்சன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

'பலோ - ஒன்' நிலைக்குத் தள்ளப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரி தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. எனினும் முதல் இன்னிங்ஸைப் போலவே இரண்டாவது இன்னிங்ஸிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அணியைக் கைவிட்டனர். நிவேத்னா 5 ஓட்டங்களுடனும் விபீஸ் 11 ஓட்டங்களுடனும் நிஷர்சனின் பந்தில் இலக்குகள் தகர்க்கப்பட்டு ஆட்டமிழந்தனர். எனினும் அதன் பின்னர் வந்த நிமலேந்திரா நம்பிக்கை ஊட்டினார். அவர் 24 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். அதன் பின்னர் வந்த மதுஷன் அசுர ஆட்டம் ஆடினார். பற்றிக்ஸ் அணியின் பந்து வீச்சாளர்களை மதுஷன் ஒரு கைபார்த்தார். பந்துகள் பவுண்டரிக்கும், சிக்ஸருக்கும் பறந்தன. மறுமுனையில் இலக்குகள் வீழ்ந்த வண்ணம் இருக்க மதுஷனின் வேட்டை தொடர்ந்து கொண்டே இருந்தது. மாதவரூபன் 9, பெண்டில்கரன் 4, கஜேந்திரன் 5, சோபிநாத் சுவன் 3 என்று வந்தவர்கள் எல்லாம் போய்க் கொண்டே இருந்தார்கள்.


இந்தப் போட்டியில் சதமடித்து உதயனின் வெற்றிப் பரிசை மதுஷன் எட்டுவார் என்று ரசிகர்கள் எதிர்பார்த்த கணத்தில், பந்தை அடித்தாட முற்பட்டு பிடிகொடுத்து 94 ஓட்டங்களுடன் மதுஷன் ஆட்டமிழக்க யாழ்ப்பாணக் கல்லூரியின் நம்பிக்கையும் தகர்ந்தது. தொடர்ந்து பற்றிக்ஸ் அணி மிரட்டலாக பந்து வீச பயந்து போனவர்களாக லிங்கராஜும் நிலக்ஷனும் ஓட்டங்கள் எதனையும் பெறாமல் களத்தை விட்டு அகன்றனர். யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாவது இன்னிங்ஸில் சகல இலக்குகளையும் இழந்து 51.5 பந்துப் பரிமாற்றங்களில் 179 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

பந்து வீச்சில் பற்றிக்ஸ் அணியின் அஜித் டார்வின் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

போட்டியில் வெற்றி பெற 65 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் களமிறங்கி ஒரு இலக்கை மாத்திரம் இழந்து வெற்றிக் கனியை பற்றிக்ஸ் பறித்தது. பற்றிக்ஸ் அணியின் ரியூடர் 30 ஓட்டங்களுடனும், குகபாலா அதிரடியாக ஆடி 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் அணியின் வெற்றியை உறுதிசெய்தனர். (ஙு-23)



வெற்றிக் களிப்பில் பற்றிக்ஸ் அணி வீரர்களும் ஆதரவாளர்களும்



வெற்றி ஈட்டிய பற்றிக்ஸ் அணிக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் சரவணபவன் எம்.பி.



சிறந்த துடுப்பாட்ட வீரர் மதுஷன் (யாழ்ப்பாணக் கல்லூரி)



ஆட்டநாயகன் அஜித் டார்வின்



சகலதுறை ஆட்ட நாயகன் நோபேட்



சிறந்த பந்து வீச்சாளர் லிவிங்ரன்



சிறந்த இணைப்பாட்ட வீரர்கள் ஜக்ஷன் + ரியூடர்



சிறந்த களத்தடுப்பாளர் நிஷர்சன்

## பற்றிக்ஸ் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி

*பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்*

பற்றிக்ஸ் 226 & 66/1 யாழ்ப்பாணக் கல்லூரி 111/10 & 179/10

9 இலக்குகளால் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி

### யாழ்ப்பாணக் கல்லூரி

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| நிவேத்னா | b அஜித் டார்வின் | 0 | 1 | 0 | 0 |
| விபீஸ் | b நிஷர்சன் | 1 | 18 | 0 | 0 |
| நிமலேந்திரா | b லிவிங்ரன் | 21 | 44 | 3 | 0 |
| மதுஷன் | lbw லிவிங்ரன் | 28 | 36 | 4 | 1 |
| பால்ராஜ் | b லிவிங்ரன் | 7 | 24 | 1 | 0 |
| பென் டில்ஹரன் | b லிவிங்ரன் | 1 | 10 | 0 | 0 |
| கஜேந்திரன் | c நிஷர்சன் b அஜித் டார்வின் | 29 | 29 | 4 | 1 |
| மாதவரூபன் | c கிளிங்ரன் b நோபேட் | 6 | 44 | 1 | 0 |
| சோபிநாத் சுவன் | c அஜித் டார்வின் b நோபேட் | 7 | 35 | 1 | 0 |
| லிங்கராஜ் | (ஆட்டமிழக்காமல்) | 1 | 1 | 0 | 0 |
| நிலக்ஷன் | c நிஷர்சன் b நோபேட் | 0 | 3 | 0 | 0 |
| உதிரிகள் | | 10 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 111 | | | |

இலக்கு இழப்பு: 1-01, 2-13, 3-52, 4-55, 5-61, 6-70, 7-97, 8-110, 9-111, 10-111

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அஜித் டார்வின் | 8 | 1 | 20 | 2 |
| நிஷர்சன் | 7 | 4 | 24 | 1 |
| நோபேட் | 9 | 0 | 21 | 3 |
| கிளிங்ரன் | 2 | 0 | 6 | 0 |
| குகபாலா | 2 | 0 | 17 | 0 |
| லிவிங்ரன் | 12 | 6 | 19 | 4 |

### யாழ்ப்பாணக் கல்லூரி (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| நிவேத்னா | b நிஷர்சன் | 5 | 21 | 1 | 0 |
| விபீஸ் | b நிஷர்சன் | 11 | 52 | 1 | 0 |
| நிமலேந்திரா | lbw லிவிங்ரன் | 24 | 47 | 3 | 0 |
| மதுஷன் | c அலஸ்ரின் b அஜித் டார்வின் | 94 | 80 | 9 | 5 |
| மாதவரூபன் | c ரியூடர் b அஜித் டார்வின் | 9 | 12 | 2 | 0 |
| பென் டில்ஹரன் | b அஜித் டார்வின் | 4 | 6 | 0 | 0 |
| கஜேந்திரன் | b லிவிங்ரன் | 5 | 11 | 0 | 0 |
| சோபிநாத் சுவன் | b அஜித் டார்வின் | 3 | 9 | 0 | 0 |
| பால்ராஜ் | (ஆட்டமிழக்காமல்) | 16 | 68 | 1 | 0 |
| லிங்கராஜ் | c லிவிங்ரன் b நோபேட் | 0 | 9 | 0 | 0 |
| நிலக்ஷன் | c ரியூடர் b நோபேட் | 0 | 3 | 0 | 0 |
| உதிரிகள் | | 8 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 179 (51.5 ஓவர்) | | | |

இலக்கு இழப்பு: 1-11, 2-26, 3-73, 4-87, 5-95, 6-122, 7-125, 8-176, 9-179, 10-179

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| அஜித் டார்வின் | 14 | 2 | 44 | 4 |
| நிஷர்சன் | 5.5 | 0 | 23 | 2 |
| நோபேட் | 6 | 2 | 22 | 2 |
| கிளிங்ரன் | 5 | 2 | 9 | 0 |
| குகபாலா | 14 | 1 | 45 | 1 |
| லிவிங்ரன் | 6 | 0 | 35 | 1 |
| அலஸ்ரீன் | 1 | 1 | 0 | 0 |

### பற்றிக்ஸ் கல்லூரி (இரண்டாவது இன்னிங்ஸ்)

| பெயர் | ஆட்டமிழப்பு | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜக்ஷன் | c மதுஷன் b நிமலேந்திரா | 6 | 21 | 1 | 0 |
| நிஷாந்த் ரியூடர் | (ஆட்டமிழக்காமல்) | 30 | 45 | 3 | 0 |
| குகபாலா | (ஆட்டமிழக்காமல்) | 28 | 25 | 4 | 0 |
| உதிரிகள் | | 2 | | | |
| மொத்த ஓட்டங்கள் | | 66 (15.1 ஓவர்) | | | |

இலக்கு இழப்பு: 1-15

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சோபிநாத் சுவன் | 3 | 1 | 9 | 0 |
| நிமலேந்திரா | 4 | 0 | 14 | 1 |
| நிலக்ஷன் | 3 | 1 | 12 | 0 |
| பென் டில்ஹரன் | 3.1 | 0 | 15 | 0 |
| கஜேந்திரன் | 1 | 0 | 7 | 0 |
| பால்ராஜ் | 1 | 0 | 7 | 0 |



நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க பாடசாலையின் மெய்வன்மைப் போட்டியின்போது சண்டிலிப்பாய் கல்விக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சிவானந்தராசா, பாடசாலை அதிபர் ஜெகதீஸ்வரன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். (ம-14)



ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இல்ல மெய்வன்மைனப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் சண்தயாளன் பாரியார் சகிதமாக பாடசாலை சமூகத்தால் அழைத்து வரப்படுகிறார். பிரதம அதிபர் அ.அருணந்திசிவம் மற்றும் விருந்தினர்களும் காணப்படுகின்றனர். (38)



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எக்லேப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வெற்றியீட்டிய ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்தினர். (09)



மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழாவில் தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சு.மனோரஞ்சிதன், பாடசாலை அதிபர் ச.கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் மாணவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்படுகின்றனர். (ம-01)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் வெற்றி பெற்ற நாவலர் இல்லத்துக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் வெற்றிக் கேடயம் வழங்குகின்றார். (ம-135)



நாவற்குழி மகா வித்தியாலயத்தின் வருடாந்த அகில மெய்வன்மைப் போட்டிக்கு விருந்தினர்களாக வருகை தந்த தென்மராட்சி கல்வி வலயப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன், கேணல் சம்பத் புளத்கம, பாடசாலை அதிபர் திருமதி வ.மேகலிங்கம், பிரதி அதிபர் திருமதி சு.செல்வராசா ஆகியோருடன் காணப்படுகின்றனர். (ம-14)






யாழ். இந்துக்கல்லூரியின் மெய்வன்மைப் போட்டிகளில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுகின்றனர். மாணவர்களின் அணிவகுப்பும் இடம் பெறுகின்றது. (ம-7)

# வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கப்படும்

## தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் ஆளுநர் உறுதிமொழி

யாழ்ப்பாணம், பெப்.26

வன்னிப் பகுதியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலின் போதே ஆளுநர் மேற்கண்டவாறு உறுதிமொழியைத் தங்களுக்கு வழங்கினார் என்று அவர் கூறினார்.

**வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் இடமாற்றத்துக்குத் தகுதியானவர்களை ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரசன்னத்துடன் சரிசெய்து மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார்**

இந்தக் கலந்துரையாடலின் விடயம் தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். குடாநாட்டிலிருந்து பதிலீட்டு ஆசிரியர்கள் அனுப்பப் படுவதனால் தொண்டர் ஆசிரியர்கள் தமது நியமனத்தை இழக்க வேண்டி ஏற்படும். எனவே வன்னிப் பகுதியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று எமது சங்கம் வேண்டுகோள் விடுத்தது.

எமது வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட ஆளுநர் வன்னிப் பகுதியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன என்றும் அது உடனடியாக நடைபெறும் எனவும் உறுதியளித்துள்ளார்.

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களில் இடமாற்றத்துக்குத் தகுதியானவர்களை ஆசிரிய தொழிற்சங்கங்களின் பிரசன்னத்துடன் சரிசெய்து மார்ச் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு ஆளுநர் கேட்டுக்கொண்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-03)

## இலங்கையின் மனித உரிமைகள் மீறல்: இந்திய அரசுக்கு அழுத்தம் அதிகரிப்பு

»1 யுறுத்தி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

''இந்தக் கொடூரமான குற்றங்களைப் புரிந்தவர்களை நீதியின் முன் நிறுத்தும்படி இலங்கை அரசை வற்புறுத்தும் தார்மீகக் கடமை இந்தியாவுக்கும் அதன் அரசுக்கும் உள்ளது'' என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகும் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானம் தொடர்பாக புதுடில்லி கனத்த அமைதியை வெளிக்காட்டி வரும் நிலையில் கொமியூனிஸ்ட் கட்சியின் வலியுறுத்தல் வெளியாகி உள்ளது.(உ-01)

## ஜெனிவாத் தொடரை எதிர்கொள்ள செல்லவேண்டியவர் பொன்சேகாவே

»1 உரிமைகள் கூட்டத் தொடரை எதிர்கொள்ள, இறுதிக்கட்ட யுத்தத்திற்கு தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவே அங்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய சிறந்த நபராக தாம் கருவதுவதாக சரத் என். சில்வா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளுடனேயே தான் போரிட்டேன் எனவும் தன்னை கொலை செய்ய மூன்று முறை குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் பொன்சேகா எடுத்துக் கூறினால் மனித உரிமைகள் பேரவையில்

போர்க்குற்றம் வலுவிழக்கும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா குறிப்பிட்டுள்ளார். (த)

## இலங்கை பிரதிநிதிகள் ஜெனிவா பயணம்

»1 பாளரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.கனகரத்தினம் உள்ளிட்ட குழுவினரே பயணமானார்கள்.

இக்குழுவினரே அமைச்சர் மஹிந்த சமரசிங்கவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத் தொடரில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஜெனிவா புறப்படுவதற்கு முன்னர் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டதாக உள்ளது.சமாதானத்ததை விரும்பாமல் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க விரும்பும் மேற்கத்திய நாடுகளின் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களால் ஒரு போதும் ஜனநாயக விழுமியங்களை கொண்ட இலங்கை தேசம் அஞ்சப் போவதில்லை" என்றார். (த)

## ஜெனிவா பிரேரணைக்கு 25 நாடுகள் முழு ஆதரவு

»1 அமெரிக்கா, கனடா அல்லது மேற்கு நாடு ஒன்று கொண்டு வரலாம் என்று எதிர்பார்ப்பு இருந்தபோதும் ஆபிரிக்க அல்லது தென்னமெரிக்க நாடு ஒன்றே அதனைக் கொண்டு வரும் என்று இப்போது தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்க நாடுகள் இரண்டு மற்றும் மெக்ஸிக்கோ உள்ளிட்ட தென்னமெரிக்க நாடுகள் இரண்டு மற்றும் பெல்ஜியம் ஆகியன ஐந்து நாடுகளில் ஒன்று அல்லது ஐந்தும் கூட்டாகப் பிரேரணையை முன்வைக்கலாம் என்று கூறப்படுகின்றது.

பிரேரணை அனேகமாக நிறைவேறிவிடும் என்ற நிலையில், அதிலிருந்து தப்ப இந்தக் கூட்டத் தொடரில் இலங்கை விவகாரத்தை விவாதிக்க வேண்டாம் என்றும் பதிலாக ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் அனைத்தினதும் மனித உரிமைகள் நிலையை மீளாய்வு செய்யும் கூட்டத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறுகையில் இலங்கை விவகாரத்தையும் விவாதிக்கலாம் என்றும் ஜெனிவாவில் உள்ள இலங்கைக் குழு கேட்டுள்ளது.

இலங்கையின் இந்தக் கோரிக்கையை சாதாகமாகப் பரிசீலிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் குறைவு என்று ஐ.நா. மனித உரிமைகள் சபை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இலங்கைக்கு எதிராகக் கடந்தமுறை கனடாவால் கொண்டுவரப்பட இருந்த பிரேரணை, இலங்கையின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்பதாக இருந்தது என்றும் தற்போது கொண்டு வரப்பட உள்ளது ''பிரகடனப் பிரேரணை''யாக இருக்கும் என்றும் அதிகாரிகள் கூறினர்.

பிரகடனப் பிரேரணை மூலம் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை என்ன செய்ய வேண்டும் என்பது பிரகடனப்படுத்தப்படும். அதன் பின்னர் அது இலங்கை அதைச் செய்கிறதா என்பது கண்காணிக்கப்படும். (உ-01)

## கூட்டமைப்பு ஜெனிவா போகாது

»1 மிக்கப்பட்ட வல்லுநர்குழுஅறிக்கை மற்றும் இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை ஆகிய இரண்டும் ஏற்கனவே வெளியாகி உள்ளன.

சர்வதேச மனிதநேய மற்றும் மனித உரிமைகள் சட்டங்களை மீறியமை, மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வொன்றை அடையத் தவறியமை, இராணுவ மயமாக்குதலை நீக்குதல், துணை ஆயுதக்குழுக்களை கட்டுப்படுத்தல், சிவில் நிர்வாகத்தை வலிவூட்ட நடவடிக்கை எடுத்தல், தகவல் சுதந்திரம் மற்றும் ஊடக சுயாதீனத்தை வலுப்படுத்தல், தடுப்பிலுள்ளோர் தொடர்பில் வெளிப்படைத் தன்மையைப் பேணுதல் ஆகியவை தொடர்பில் அந்த அறிக்கைகளில் காத்திரமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கின்ற மக்களுக்கும், இனப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த விடயங்கள் மிக முக்கியமானவை. போரும் அது நடத்தப்பட்ட முறையும் தமிழ் மக்களுக்குப் பெரும் பின்விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான விடயங்கள் கலந்துரையாடப்படும் எந்த தொடர் நிகழ்வுகளைப் பற்றியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நியாயமான கரிசனையைக் கொண்டுள்ளது. இந்த இரு அறிக்கைகள் தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளதுடன் அதன் நிலைப்பாட்டினை மீளவும் வலியுறுத்துகிறது.

கடந்த ஆறு தசாப்த காலமாக இலங்கை அரசானது இலங்கைக்குள் இருக்கும் பல்தேசிய, பல்கலாசார பன்மைச் சமூகத்துக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறியுள்ளமையும், சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் அது கைச்சாத்திட்டுள்ள சர்வதேச உடன்பாடுகள் ஆகியவைகளை மீறிச்செயற்படுவதும் கவலைக்குரிய விடயங்கள். இதனால் தான் தற்போதைய நிலைமைக்கு இலங்கை முகம்கொடுக்க நேர்ந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய இலங்கைக்குள் நிலைத்து நிற்கத்தக்கதும் நடைமுறைக்கு ஏதுவானதுமான நேர்மையான அரசியல் தீர்வைக் கண்டடைவதற்கான தனது அர்ப்பணிப்பைப் பகிரங்கமாகக் கூறிவந்துள்ளதுடன், அதனை அது மீளவும் வலியுறுத்துகிறது. ஒரு வருட காலத்துக்கு மேலாக அரசாங்கத்துடன் சேர்ந்து அத்தகைய தீர்வைக் கண்டடைவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்கபூர்வமான வழிமுறைகளிலே முயன்றும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய அரசியல் தீர்வைக் கண்டடைவதிலே அரசுக்கு நேர்மையான அர்ப்பணிப்பு இல்லாமையினால் அது எவ்வித முன்னேற்றத்தையுமே காணவில்லை.

இலங்கை அரசு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் தோல்வியடைவது திரும்பத் திரும்ப இடம்பெறுகின்றது. அத்துடன் பொறுப்புக்கூறலை உள்ளடக்கிய அறிக்கைகள் எதனையும் அவது வெளியிடவும் இல்லை.

இத்தகைய நிலையற்ற தன்மை தொடர்ந்தால் வன்முறை மீண்டும் எழக்கூடும் என்றும் அதனால் பொதுமக்கள் மீண்டும் பாதிப்படையக்கூடும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையிலேயே அச்சம் கொண்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையிலே அமைதி காக்கப்படுவதும், பிரச்சினைகளைத் தவிர்ப்பதும் அவசியமான செயற்பாடுகளென கூட்டமைப்பு கருதுகிறது. இந்தக் காரணங்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவுக்குச் செல்லாது.

நாடு தற்போது இருக்கும் நிலைமைக்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளும், மேற்கொள்ளத் தவறிய நடவடிக்கைகளும் மட்டுமே மூலகாரணம் என்பதை நாட்டுமக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். இனப்பிரச்சினைக்கான இறுதித்தீர்வை எட்டுவதில் எவ்வித தடையையும் அரச தரப்பு போடக்கூடாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுக்கிறது - என்றுள்ளது. (உ-01)

## புலிகள் சரணடைய முன்வந்த இடத்துக்கு பிளேக்குடன் செல்ல அனுமதி மறுப்பு

»1 பியார், இனப்படுகொலையில் நான் சம்பந்தப்பட்டுள்ளதாக நீங்கள் கூறுவது உங்களில் உள்ள பிரச்சினை. இந்த விவகாரத்தில் மேரி கொல்வின் தொடர்புபட்டிருந்தார். தற்போது அவர் மரணமாகி விட்டார். எனது நிலையை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சிரியாவில் கடந்தவாரம் கொல்லப்பட்ட பிரிட்டிஷ் ஊடகவியலாளர் மேரி கொல்வின், இலங்கையில் போர் இறுதிக் கட்டத்தை அடைந்திருந்த போது என்னுடன் தொடர்பு கொண்டார்.விடுதலைப் புலிகளின் தலைவர்கள் சிலர் சரணடைவதற்குத் தரகராகச் செயற்பட அவர் முனைந்தார். அவர் என்னுடன் பேசினார் என்பது உங்களுக்குத் தெரியும் - என்றார்.

அதையடுத்து இன்னர் சிற்றி பிரஸ், சரணடைவதற்குச் சாட்சியாகச் செல்லும்படி உங்களை கொல்வின் வலியுறுத்தினார் அல்லவா? என்று கேட்டது. அதற்கு அவர், ஆம் என்றார்.அங்கு போகும்படி கேட்கப்பட்டேன். இரண்டுமுறை நான் அமெரிக்க இராஜதந்திரி பிளேக்குடன் தொடர்பு கொண்டேன். நாம் இருவரும் அங்கு போகத் திட்டமிட்டிருந்தோம்.கடல் வழியாக அனைத்துலுக செஞ்சிலுவைக் குழுவால் அங்கு போக முடியவில்லை. இலங்கை அரசு எமக்கு அனுமதி மறுத்து விட்டது. எம்மால் கட்டாயப்படுத்த முடியவில்லை. எமக்கு வேறு வழி இல்லை என்றார் நம்பியார்.

சரணடைய முயன்றவர்கள் சாட்சிகளின்றிக் கொல்லப்பட்டது குறித்து வெளியில் ஏன் நீங்கள் பேசவில்லை? என்று இன்னர்சிற்றி பிரஸ் அவரிடம் கேள்வி எழுப்பியது.அன்று நள்ளிரவு நேரம் மேரி என்னை அழைத்தார். இரண்டு பேர் அவர்களின் பெயர்களை நான் மறந்து விட்டேன், ஒருவர், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்தவர் - சரணடைய விரும்புவதாகச் சொன்னார்.

சுதந்திரமாகச் சென்று சரணடைவதற்கான உறுதிப்பாட்டைப் பெறுத்தர வேண்டும் என்று கோரினார். நான் சரி என்று சொன்னேன்.என்னால் அதைச் செய்ய முடியும். அதை இலங்கை வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி ஆகியோரிடம் எடுத்துச் சென்றேன்.சரணடையும் எவரையும் தாம் ஏற்க விரும்புவதாக அவர்கள் கூறினர். அதன்பின்னர் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. என்றார் நம்பியார்.

உறுதிமொழியை நீங்கள் பெற்றுக் கொடுத்திருந்தால், அப்போது சாட்சியாகச் செல்வதற்கு தடுக்கப்பட்டது, நீங்கள் உறுதிமொழி பெற்றுக் கொடுத்தவர்கள் கொல்லப்பட்டது குறித்து ஏன் நீங்கள் வெளியே பேசவில்லை? என்று கேள்வி எழுப்பியது இன்னர்சிற்றி பிரஸ்.

பின்னர் அவர்களின் ஆள்களாலேயே அவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். நான் எந்த ஊகத்தையும் கொண்டிருக்கவில்லை. பஸில் ராஜபக்ஷ கூட அதனைச் சொன்னார். கோத்தாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கும் அது முக்கியமானதாக இருந்தது.

அப்போதைய இலங்கை வெளிவிவகாரச் செயலர் பாலித கொஹன்னவுடனும் பேசியிருந்தேன் என்று கூறியுள்ளார் நம்பியார். (த)

**லண்டன், சுவிஸ் விசா**

இலவச சட்ட ஆலோசனைகளுக்கு நேரில் வரவேண்டும்

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்றட்**

371, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண்வீதி யாழ்ப்பாணம்.
0212219016

115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி.
0212285544
மன்னார், வவுனியா.
0773454304
மெல்போன் அவுஸ்திரேலியா
0061412479209

# அரசுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நாளை கிளிநொச்சியில் நடத்த ஏற்பாடு

## மக்களுக்கு 'அள்ளித் தருவதாக' வாக்குறுதி

கிளிநொச்சி, பெப். 26.

பொருளாதார அமைச்சின் கீழ் உள்ள மீள் எழுச்சிக் குழுக்களை ஒன்றிணைத்து ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரும் தீர்மானத்தைத் கண்டிக்கும் முகமாக நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவதற்கு அரச தரப்பினர் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கிளிநொச்சி மாவட்ட சுதந்திரக் கட்சி அமைப்பாளர் கீதாஞ்சலி தலைமையில் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

மின்சார வசதியில்லாத பகுதிகளுக்குச் சூரிய மின்கலம் வழங்கப்படும் என்றும் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும் என்றும் அரச காணிகளில் உள்ள மக்களுக்கு சொந்தமாக உறுதிகள் பெற்றுத் தரப்படும் என்றும் மீள் எழுச்சிக் குழுக்கள் ஊடாக மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது.

இதற்காக நாளை காலை கிளிநொச்சி நகரில் மக்களை ஒன்றுகூடுமாறும் அதற்கு போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-323-301)

**ஆரம்பமாகிவிட்டது**

2012 தரம்:-5 மாணவர்களுக்கான
வெற்றித்தேர்வு வளவாளர்களின் இரவு நேர விசேட வினாவிடை வகுப்பு
(பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு மட்டும்)

இலகு ரீதியான பயிற்சிப் பரீட்சைகளுடன் விசேட கையேடுகளும் வழங்கப்படும்

வெற்றித்தேர்வு தொடர்பரீட்சைகள் ஒவ்வொரு ஞாயிறும் வழமையான நேரங்களில் பதிவுகளை இன்றே மேற்கொள்ளுங்கள்

சயன்ஸ் அக்கடமி-நல்லூர்
தொடர்புகளுக்கு:-0212229016, 0775388471, 0773126807

**இரும்புசீற் (அயன்சீற்) வெட்டி கொடுக்கப்படும்**




ஹைரோலிக் சியாறிங் இயந்திரத்தின் மூலம் 0.8mm முதல் 14mm வரையான [1/8 = 5/8] இரும்புத் தகடுகள், கல்வனைஸ் தகடுகள் போன்றவை வேண்டிய அளவுகளில் குறுகிய நேரத்தில் வெட்டிக் கொடுக்கப்படும்.

கட்டட தேவைகட்கான நஸ்ற் பிளேற்கள்
இதர தேவைகட்கான பிளேற்களும் வெட்டப்படும்.

**செல்வா காட்வெயர்ஸ்**
120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2873, 021 482 5810

**வின்றிச்**
10 வரப்பிரசாதங்களுடன்
ஐஸ்கிறீம் இயந்திரம்

50,000/- மேல்
மாத வருமானம்

- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை




விலை ரூ 99,000/- இல் இருந்து | புத்தம் புதியது

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.

தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 477 4782

**தமிழ் விசேட வகுப்புகள்**

A/L 2014 சனி,ஞாயிறு - காலை 8 மணி
A/L 2013 சனி,ஞாயிறு - காலை 9 மணி
A/L 2012 சனி,ஞாயிறு - மு.ப. 10 மணி
A/L 2011 மீள் - சனி,ஞாயிறு - மு.ப. 11

ஆரம்பம்: 2012-03-03 சனிக்கிழமை, காலை 8 மணி

இடம் "தமிழ்க்குடில்"
இல. 95, தொட்டிலடி, சங்கானை.
தொடர்புகளுக்கு : 0774535288

**STUDY IN UK**

AFTER GCE O/L
GCE A/L
what next?

February/March Intake க்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

உங்கள் London செல்லும் கனவை நனவாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்

நீங்கள் ஏன் Exponet ஐ தெரிவுசெய்ய வேண்டும்

- 4 வருட visa உத்தரவாதம்
- ஒரு மாதத்தில் பயணம்
- 20 மணித்தியாலம் வேலை செய்யும் வசதி(per week)
- GCE(O/L) தகமை போதுமானது
- இலவச IELTS வகுப்புகள்

HOTLINE : 021 7538395 / 021 2227230
011 7 555511/14

EXPONET
379 - ½, Galle Road, Colombo 06.
197, Arasady Road, Jaffna.
E-mail:nimal@expogroup.lk
Web:www.expogroup.lk


**METHU'S**
Kids 'N' Baby Care

யாழ். மண்ணில், சிறுவர்கள், குழந்தைகளுக்கான அனைத்து விதமான தேவைகளுக்கும்.



195, Navalar Road, Jaffna T.P. 0773131622

**குடிசார் எந்திரவியல் துறையில் ஓர் மைல்கல்!**
செயன்முறை அலகுகளைக் கொண்ட
புதிய பாடநெறி ஆரம்பமாகின்றது.




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.